# நந்தா எல்லவெல எம். பி. பதவி செல்லாது!


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 259
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 11 ஷஃபான் 26 புதன்கிழமை (28-10-70)



எமது தீபாவளி
மலிவு விற்பனை
15 முதல் 28 வரை
தீபாவளி பண்டிகையை
சிறப்புடன் கொண்டாட
தரமான ஜவுளிகளைத்
தெரிவு செய்ய
ராஜ்கோபால்ஸ்
[பிரபல ஜவுளி மாளிகை]
36/1, பெரியகடை, யாழ்ப்பாணம்.


## நீதிமன்றம் தீர்ப்பு

கோட்டை, செவ்வாய் இரத்தினபுரித் தொகுதியிலிருந்து திரு நந்தா எல்லவெல ஆட்சிமன்றத்துக்குப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாதென்று தேர்தல்நீதிமன்றம் இன்று தீர்ப்பளித்தது:

திரு நந்தா எல்லவெல இரத்தினபுரித் தொகுதிப் பிரதிநிதியாக ஆட்சிமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டது செல்லுபடியாகாதென தீர்ப்பளிக்குமாறு கோரிச் செய்யப்பட்டிருந்த மனு மீதான விசாரணை முடிவடைந்து இன்று தீர்ப்பளிக்கப்பட்டது. ஆட்சேப மனுவை விசாரணை செய்த நீதியரசர் திரு ஓ. எல், டி. கிரெட்சர் திரு நந்தா எல்லவெல ஆட்சிமன்றத்துக்கு இரத்தினபுரித் தொகுதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டது செல்லுபடியாகாதென்று தீர்ப்பளித்ததுடன் மனுதாரின் செலவு தொகையையும் கட்டவேண்டுமென்றும் தீர்ப்புளித்தார்.

திரு நந்தா எல்லவெல சென்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட்டு வெற்றியீட்டினார்.

நந்தா எல்லாவல தெரிவு செல்லுபடியாகதென ஆட்சேபித்துவழக்குத் தாக்கல் செய்திருந்த திரு. பி. பி. விஜயசுந்தராவுக்கு செலவு தொகையாக மூவாயிரம்ரூபாய் செலுத்துமாறுநீதிபதிஉத்தரவிட்டார்

சி. பி. ஏ

### 100, 50 ரூபா பழைய நோட்டுக்களை மாற்ற

# யாழ். நகரில் சுமார் 10,000 பேர் வங்கிகளின் முன் காத்திருந்தனர்!

## வீதிகள் எங்கும்பலத்த பொலிஸ் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள வங்கிகளில் நேற்றுக் காலை முதல் சுமார் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்களை மாற்றுவதற்காக நீண்டநேரம் காத்துநின்றனர், ஒவ்வொரு வங்கியையும் ஆயுத[illegible]ங்கிய பொலிசாரும் கடற்படை[illegible]னரும் காவல் புரிந்தனர்.

நேற்றுக் காலை 6 மணிக்கே மக்கள் தங்கள் பங்கீட்டரிசிப் புத்தகங்களுடன் வங்கிகளின் முன் கியூவில் நிற்பதற்காக வந்துவிட்டனர். பங்கீட்டரிசிப் புத்தகம் [illegible]

அடிக்கடி பொலிசார் கலைந்து செல்லும்படி கேட்டுக் கொண்டிருந்தனர் நகர வீதி[illegible] [illegible]ன பொலிஸ் உயர் அதிகாரிகள் [illegible]

காணப்பட்ட கியூதான் மிக நீளமாக இருந்தது. புதிய நோட்டுக்களை மக்கள் கூட்டம் கூட்டமாக [illegible] பொலிஸ் நிலையங்களி[illegible]ம் வீதி ஓரங்களிலும்நின்[illegible] பார்வையிட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## துப்பாக்கியுடன் ஆட்களைத் துரத்திய இருவர் கைது!

### சாவகச்சேரியில் நேற்று நடந்தது

மட்டுவில், புதன்

சாவகச்சேரி பகுதியில் நேற்றுக் கைத்துப்பாக்கியுடன் காணப்பட்ட இருவரை சாவகச்சேரி பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்

சந்தேக நபர்களான கணபதி சிவஞானம், அப்புக்குட்டி துரைராஜா ஆகிய இருவரும் கைத்துப்பாக்கியுடன் ஆட்களைத் துரத்தியதாக பொலிஸில் புகார்செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இன்ஸ்பெக்டர் கதிர்காமநாதன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர், இருவரையும் மடக்கிப் பிடித்தனர். அவர்களிடம் கைப்பற்றப்பட்ட கைத்துப்பாக்கியில்குண்டுகள் காணப்பட்டன.

சாவகச்சேரி மாவட்டநீதிபதி திரு. ஐ. சிவானந்தன் முன்னிலையில் சந்தேகநபர்கள் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிபதி அவர்களை இம்மாதம் 30-ம் தேதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## வங்கிக்குச் சென்றவர்கள் கைது!

மட்டுவில், செவ்வாய்

100 ரூபா 50 ரூபா நோட்டுகளை, வங்கிக்கு மாற்றச் சென்ற ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். அவரிடம் அச்சமயம் 1000 ரூபா இருந்ததாக கூறப்பட்டது.

வீட்டில் 1000 ரூபா திருட்டுப்போய்விட்டதாக மற்றொருவர் செய்துகொண்ட புகாரைத்தொடர்ந்தேஇவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். தகுந்த ஆதாரம் காட்டியபின் பொலிஸார் அவரை விடுதலைசெய்தனர்.

பளைப்பகுதியில் இருந்த மற்றும் இரு வாலிபர்களை சாவகச்சேரி பொலிஸார் சந்தேகத்தின் [illegible]

வங்கி கியூவில்

## சோடாப் போத்தலுடன் கியூவில் பெண்கள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் வங்கிகளின் முன் காணப்பட்ட கியூ வரிசையில் ஆசிரியர்களும் அரசாங்க ஊழியர்களும், பெண்களும், அதிகமாகக் காணப்பட்டனர்.

100ரூபா, 50 ரூபாநோட்டுக்களை சம்பளமாகப் பெற்ற ஆசிரியர்களும் அரசாங்க ஊழியர்களும்கியூவில் நின்றே அவற்றை மாற்றிச் சென்றனர்.

யாழ். அரசாங்க செயலகத்தில் கடமையாற்றும், ஊழியர்கள் சிலர் கியூவில் நிற்காமல் நேரேவங்கிக்குள் செல்ல முற்பட்டபோது பொலிஸார் அவர்களை கியூவில் நின்றுவருமாறு தெரிவித்தினர்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஊழியர்கள் தங்கள்சம்பளப் பணத்தை வங்கியில் மாற்றுவதற்கு லீவு தரவேண்டுமென வைத்திய அதியட்சகரிடம் கோரியுள்ளார்கள்.

நேற்று பிற்பகல். காசு மாற்ற சென்றவர்கள் சோடாப் போத்தல்களும் கொண்டு சென்றனர்.

உப-தபால் நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்கள், தங்கள் சம்பளத்தை பெற மறுத்துவிட்டனர் அவர்களின் சம்பளம்பணம் 100 ரூபா 50ரூபா நோட்டுக்களாக அனுப்பப்பட்டதேகாரணம் சம்பளப்பணத்தை 10 ரூபா வாகவோ அல்லது புதிய 100ரூபா 50 ரூபா நோட்டுகளாகவோ தரும்படி அவர்கள் கோரியுள்ளனர் புதிய நோட்டுக்கள் அனுப்பிவைக்கப்படுமென அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

## பஸ்ஸில் ஜேப்படி

யாழ்ப்பாணம், புதன்

100 ரூபா, 50 ரூபாநோட்டுகளுடன் வங்கிக்குச் சென்ற பல பிரயாணிகளிடம் நேற்று ஜேப்படி நடந்துள்ளது. பிரயாணிகளுடன் 3 பஸ்கள் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லபட்டு, பிரயாணிகள் சோதனையிடப்பட்டு விசாரணை செய்யப்பட்டது.

யாழ். அரசாங்க செயலகத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரிடம் 650 ரூபா பஸ் ஒன்றில் ஜேப்படி செய்யப்பட்டது. மற்றும் இருவரிடமும் பஸ்ஸில் பணம் ஜேப்படி செய்யப்[illegible] கிகளுக்கு வருவதால் பணமோசடி செய்யப்படுவதாக சந்தேகப்படுவதுடன் பலத்த விசாரணைக்குட்படுத்தப்படுவார்களென்றும்பொலிஸார் தெரிவித்தனர்.

### சாவகச்சேரியில்

சாவகச்சேரி பஸ் நிலையத்தில் நின்ற ஒரு வாலிபரிடம் ரூபா 950களவாடப்பட்டது இதுசம்பந்தமாக கண்டகிடரிடம் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பஸ் பொலிஸ் நிலையத்துக்குச் செலுத்தப்பட்டது.

சந்தேகநபர்கள் சிலர் சோதனைக்குட்படுத்தப்பட்ட [illegible]

இருவரும் கைத்துப்பாக்கியுடன் ஆட்களைத் துரத்தியதாக பொலிஸில் புகார்செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்

முன்னிலையில் சந்தேகநபர்கள் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிபதி அவர்களை இம்மாதம் 30-ம் தேதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்

காவல் புரிந்தனர்.

நேற்றுக் காலை 6 மணிக்கே மக்கள் தங்கள் பங்கிட்டரிசிப் புத்தகங்களுடன் வங்கிகளின் முன் கியூவில் நிற்பதற்காக வந்துவிட்டனர். பங்கிட்டரிசிப் புத்தகம் கொண்டுவராதவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். ஒவ்வொரு வங்கியின் முன்பும் நீண்ட 'கியூவில் மக்கள் காணப்பட்டனர் பிற்பகல் வரை தொடர்ந்து பலர் கியூவல் நின்றனர்.

வங்கிகளின் முன்னால் திரண்டு நின்ற மக்களை அடிக்கடி பொலிசார் கலைந்து செல்லும்படி கேட்டுக் கொண்டிருந்தனர் நகர வீதிகளிலும் சந்திகளிலும் [illegible]சார் காணப்பட்டனர் பொலிஸ் உயர் அதிகாரிகள் காரில் அடிக்கடி ஒவ்வொரு வங்கிக்கும் சென்று நிலைமையைப் பார்வையிட்டனர்

ஒவ்வொரு வங்கியிலும் பணம் மாற்றுவதற்கு ஒரு கியூவும் வைப்புப்பணம் போடுவதற்கு மற்றொரு கியூவும் காணப்பட்டது. பணம் மாற்றுவதற்காகக் காணப்பட்ட கியூதான் மிக நீளமாக இருந்தது.

புதிய நோட்டுக்களை மக்கள் கூட்டம் கூட்டமாக பஸ் நிலையங்களி[illegible]ம் வீதி ஓரங்களிலும்நி[illegible] பார்வையிட்டனர்.

ஜேப்படி காரர்கள் மீதும் திருடர்கள் மீதும் பொதுமக்களை எச்சரிக்கையாக இருக்கும்படி பொலிசார் ஒலிபெருக்கி மூலம் அறிவித்திருந்தனர்.

இலங்கை வங்கியில் பணம் மாற்றுவதற்கு நின்ற கியூ 1-ம் குறுக்குத் தெருவரை நீடித்திருந்தது. மெர்சண்டையில் வங்கியில் பணம் மாற்ற நின்றவர்களின் கியூ முனீஸ்வரன் வீதி முடியும் வரை காணப்பட்டது. மக்கள் வங்கியில் பணம் மாற்ற நின்றவர்களின் கியூவே மிகவும் நீளமாகக் காணப்பட்டது.

புகாரைத்தொடர்ந்தேஇவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். தகுந்த ஆதாரம் காட்டியபின் பொலிஸார் அவரை விடுதலைசெய்தனர்.

பளைப்பகுதியில் இருந்த மற்றும் இரு வாலிபர்களை சாவகச்சேரி பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணைசெய்தனர் இருவரிடமும் 800 ரூபா இருந்ததாக விசாரணையில் தெரியவந்தது

இவர்களின் நடமாட்டத்தைச் சாதாரண உடையில் அவதானித்த பொலிஸார் சந்தேகங்கொண்டதால், தொடர்ந்து பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்

செய்யப்பட்டது.

யாழ். அரசாங்க செயலகத்தில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரிடம் 650 ரூபா பஸ் ஒன்றில் ஜேப்படி செய்யப்பட்டது. மற்றும் இருவரிடமும் பஸ்ஸில் பணம் ஜேப்படி செய்யப்பட்டது, விசாரணை செய்யப்பட்ட போதிலும், ஜேப்படி செய்யப்பட்ட பணம் கண்டு பிடிக்கப்படவில்லை

சுன்னாகம், பருத்தித்துறை காங்கேசன்துறை, ஊர்காவற்றுறை போன்ற இடங்களில் உள்ளவர்கள் அங்குள்ள வங்கிக் கிளைகளில் நோட்டுகளை மாற்றும்படி பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள வங்

ரூபா 950 களவாடப்பட்டது இதுசம்பந்தமாக கண்டக்டரிடம் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பஸ் பொலிஸ் நிலையத்துக்குச் செலுத்தப்பட்டது.

சந்தேகநபர்கள் சிலர் சோதனைக்குட்படுத்தப்பட்ட போதிலும் களவுபோன 50 ரூபா நோட்டுக்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. பஸ்ஸில் இருந்த பிரயாணிகள் அனைவரிடமும் பெருந்தொகையான பணம் காணப்பட்டது

ஜேப்படி செய்தவர் பஸ்ஸில் ஏறுமலேயே மறைந்துவிட்டதாகத் தெரிகிறது. பொலிசார் ஜேப்படிக்காரர்களைக்கண்காணித்து வருகின்றனர். (குவிம)

# போயா தினத்தன்று

## வங்கிகள் திறந்திருக்கும்

கோட்டை, செவ்

வங்கிகள்யாவும் பொதுமக்கள் தமது 100, 50 ரூபா நோட்டுக்களை மாற்றிக் கொள்வதற்காக நாளை (புதன்) காலை 10 மணியிலிருந்து 2மணிவரை திறந்து வைக்கப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டது.

போயா தினத்தன்றும் வங்கிகள் திறந்திருக்கும். அரசாங்கம் கேட்டுக் கொண்டதின்பேரில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

புதிய வரவு செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள், மிகவும்சிறந்த பலாபலன்களை அளித்திருப்பதாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில், முன் எப்போதையும்விட நேற்று காசு கொடுப்பனவு அதிகமாகஇருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஒருவர் மாத்திரம் 5 லட்சம் ரூபா செலுத்தினாராம்.

ஊரிக்காடு பெண் கடத்து வழக்கு

# 'பலவந்தமாக என்னை

## காருக்குள் தூக்கிப் போட்டனர்'

வல்வெட்டித்துறை, செவ்.

'திருவிழா பார்த்துவிட்டு வீட்டிற்குத்திரும்பிக் கொண்டிருந்த என்னை எதிரிகள் பலவந்தமாக காருக்குள் தூக்கிப் போட்டனர். நான் ஐயோ அம்மா என்று குளறினேன். அந்த நேரத்தில் இரண்டாவது எதிரி எனது கண்ணையும் வாயையும் பொத்தினர். கார் உடனே புறப்பட்டுச் சென்றது' என வல்வெட்டித்துறை ஊரிக்காட்டைச் சேர்ந்த மகாலிங்கத்தின் மகளான தங்கமணி என்பவர் (வயது 22) பருத்தித்துறை மாஜிஸ்திடிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

இவ்வழக்கு வல்வை ஊரிக்காட்டைச் சேர்ந்த சி. தவராசா, சி. சிவசாமி, க. ஞானசிகாமணி, கனகேந்திரம் ஆகியோர் கடந்த ஆவணி மாதம் 19-ம் திகதி அதே இடத்தைச் சேர்ந்த ம. தங்கமணியை பலவந்தமாகக்கடத்தியதாக வல்வெட்டித்துறை பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப் பட்டது.

தங்கமணி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது: சம்பவ நாள் அதிகாலை சுமார் ஐந்து மணிக்கு வைரவகோவில் திருவிழா பார்த்துவிட்டு வீட்டுக்கு நான், அம்மா, அக்கா, தம்பி, சிறிய தகப்பனார் பாலசிங்கம் ஆகியோருடன் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். வீட்டிற்குச் சமீபமாக வந்த பொழுது எங்கள் பின்னால் ஒரு கார் வந்து நின்றது. காரிலிருந்து முதலாம் எதிரி குதித்து இறங்கி எனது கையைப் பிடித்து இழுத்தார். அந்த நேரத்தில் எனது சிறிய தகப்பனார் அவரின் கையை விடுவிக்கத் தெண்டித்துக் கொண்டிருக்க 2-வது எதிரி காருக்குள் இருந்துகொண்டு எனது கையைப் பிடித்து காருக்குள் இழுத்தார். 4-வது எதிரி எனது காலைத் தூக்கி காருக்குள் போட்டார், உடனே அம்மாவும், அக்காவும் என்னைப் பிடித்து இழுத்தார்கள் முடியவில்லை கார் புறப்பட்டதும் நான் ஐயோ அம்மா என்று குளறினேன். காருக்குள் இருந்த 2-வது எதிரி எனது கண்ணையும், வாயையும் பொத்தினர். பிறகு பொத்திய கையை விட்டபோது கார் தொண்டமானாற்றுப் பாலத்துக்குக் கிட்டப் போய்க் கொண்டிருந்தது, கார் கடைசியாக கொக்குவிலில் சின்னராசா என்பவர் வீட்டில் போய் நின்றது சின்னராசா வீட்டில் நின்ற சமயம் எனது ஒன்றவிட்ட

(4-ம்பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்தில்

# 5, 10 ரூபா நோட்டுகளுக்கு

## தங்கம் விலை குறைப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் நகைக் கடைகளில் நேற்று திடீரென தங்கப்பவுணின் விலை 165 ரூபாவிலிருந்து 150 ரூபாவாக குறைந்துள்ளது. 10 ரூபா, 5ரூபா நோட்டுகளை கொடுப்பவர்களுக்கு நகைகள், பவுண் 150 ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டது.

சில கடைகளில் நேற்று 100 ரூபா, 50ரூபா நோட்டுக்களுக்கு தங்கப்பவுண் 170 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது சில நகைக் கடைகளில் 100 ரூபா, 50 ரூபா நோட்டுக்கள் வாங்க மறுத்துவிட்டனர்

சில ஜவுளிக்கடைகளில், 100 ரூபா. 50 ரூபா நோட்டுக்களைகொடுப்பவர்களுக்கு சேலைகளின விலையைக்கூட்டி விற்பனை செய்வதாக தெரியவருகிறது. வழக்கமாக 50 ரூபா விற்ற சேலைகள் 60 ரூபா முதல் 65 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டதாம்.

யாழ்ப்பாணத்தில் நேற்று எந்தக்கடையிலும், 100ரூபா 50 ரூபா நோட்டுகள் மாற்றமுடியாமலிருந்தது.

சில நகைக்கடைகள் 100 ரூபா 50ரூபா நோட்டுக்களை வாங்கிக்கொண்டு நகைகள் செய்ய ஓடர் எடுத்தார்கள் என்றும் இரண்டொருதினங்களில் இந்த நோட்டுக்களை வங்கிகளில் மாற்றித்தர வேண்டும் என்ற நிபந்தனையில்தான் ஓடர் எடுக்கப்பட்டதென்றும் தெரியவருகிறது.

வங்கிகளில்

## புதிய கருமபீடம்

50 ரூபா, 100 ரூபா நோட்டுகளைப் பொதுமக்களுக்குத் தாமதமின்றி மாற்றிக் கொடுப்பதற்காக நாட்டின் சகல வங்கிகளிலும் புதிய கருமபீடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கான மக்கள் இப்புதிய கரும பீடங்களிலும் பழைய கருமபீடங்களிலும் தங்கள் நோட்டுக்களை மாற்றுவதில் ஈடுபடுகின்றனர்.

தபால் சேமிப்பு வங்கிகளும் பழைய நோட்டுக்களை ஏற்று, மாற்றிக் கொடுக்கின்றன.

# செனட் ஒழிப்பு மசோதாவை பிரதிநிதிகள் சபை ஏற்றது

## தமிழ் காங்கிரஸ் ஆதரவு

கொழும்பு, செவ்.

செனட்ஒழிப்புமசோதா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் அதன் எல்லாக்கட்டங்களிலும்நிறைவேறியது. தமிழ்காங்கிரஸ் அங்கத்தவர்கள் அரசாங்கத்திற்கு சார்பாக வாக்களித்தது குறிப்பிடத்தக்கது.

மசோதாவுக்குச் சாதகமாக 117 வாக்குகளும் எதிராக 16 வாக்குகளும் பதிவாகின.

இந்த மசோதாவை மட்டக்களப்பு இரண்டாவது பிரதிநிதி திரு. இராஜன் செல்வநாயகமும் ஆதரித்து வாக்களித்தார்.

இம்மசோதாமீது மக்கள் பிரதிநிதிகள் சபையில் தீவுப் பகுதி எம்.பி. பண்டிதர் கா.பொ-இரத்தினம் பேசுகையில் கூறியதாவது:- இவ்வித சட்டங்களை நீங்கள் கொண்டுவருவதினால், இங்குள்ள சிறுபான்மை மக்களின் பிரதிநிதிகளாகியநாங்கள் எதிர்காலத்தில் அரசியல் திட்டம் எப்படி அமையப் போகிறதோ என்பதில் சந்தேகம் கொள்ளவேண்டியுள்ளது. சோஷலிசம் பேசும் நீங்கள் சாதி அடிப்படையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது கேலிக்குரியவிடயமாகும். உங்கள் அரசாங்கத்தில் இருக்கும் நியமன அமைச்சர்களில் எங்களுக்கு நம்பிக்கை குறைந்து கொண்டு போகிறது. உங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால் உங்கள் அரசாங்கத்தில் அமைச்சகளாக சேரக் கதவைத்தட்டிக் கொண்டிருக்கும் சிலதமிழர்களை சேர்த்துக்கொள்ளுங்கள் என்றார்.

வட்டுக்கோட்டை எம்.பி. திரு. ஆ. தியாகராசா பேசுகையில் கூறியதாவது:- 'மக்கள் சிந்தனைக்கு ஏற்ப, மக்கள் பிரதிநிதிகள் தங்கள் அபிலாஷைகளை மாற்றிக் கொள்ளவேண்டும். கடந்த 20 ஆண்டுகளாக செனட் சபை உருப்படியான செயல்களைச் செய்யவில்லை. பிரதிநிதிகள் தங்கள் சொந்த நலன்களிலிருந்து மேலெழுந்துஇராஜதந்திரிகளாக நடந்து கொள்ளவேண்டும்' என்றார்.

### நியமன எம்.பி.க்கள்

செனட் ஒழிப்பு சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்ட மசோதாவில் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கான நியமனப் பிரதி நிதிகளின் எண்ணிக்கையை ஆறிலிருந்து எட்டாக அதிகரிப்பதற்கான சரத்து நீக்கப்படுவதாகவும் அவர் அறிவித்தார். (சி.பி.ஏ.)

# அவசரகால சட்டம் சிலபகுதிகளில் அமுல்

கொழும்பு, செவ்வாய்

அவசரகாலச்சட்டத்தின் சிலபகுதிகள் நேற்றுமுதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. இதுபற்றி அரசியல் அமைப்புச் சட்ட அலுவல்கள் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா மக்கள் பிரதிநிதிகள் சபையில் இன்று அறிவித்தார். பழைய ரூபா நோட்டுக்களைப் பொது மக்கள் இலகுவாக மாற்றிக் கொள்வதற்கு வசதி செய்யும் முகமாகவே இச்சட்டவிதிகள் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

(இ.பி.ஏ.)

## சிறுசம்பவங்கள்

கொழும்பு அக் 27

நாட்டின் பல பாகங்களிலும் வங்கிகளில் மக்கள் தம் ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொள்வதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் அதேவேளையில் ஆங்காங்கே சிறுசிறு சம்பவங்கள் நடைபெற்றதாக செய்திகள் கிடைத்துள்ளன

ஆனால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமைதிநிலவிவருவதாகவும் சட்டமும்ஒழுங்கும் பராமரிக்கப்பட்டுவருவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# பணத்தைக் கொடுக்க விரும்பவில்லை

## பொருட்களை வாங்குகிறார்கள்

கொழும்பு, செவ்.

ரூபாநோட்டுக்களைபதுக்கி வைத்திருப்பவர்கள், அவைகளை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதைக் காட்டிலும் கூடியவரை கிடைக்கும் பொருட்கள் எல்லாவற்றையும் விலைக்கு வாங்கிக்கொள்வதில் பெரிதும் ஆர்வம்காட்டுகிறார்கள். நேற்று அரசாங்க ஜவுளி விற்பனவு நிலையங்களில் மாத்திரம் ஏராளமான ஜவுளி விற்பனையாகியிருக்கிறது 'சலுசல' கூ.மொ.வி ஸ்தாபனம் போன்றநிறுவனங்களில் வழமையைவிட விற்பனவு பல மடங்கு அதிகரித்ததாக அறிவிக்கப்பட்டது.

வங்கிகளின் முன்னால் இன்று அதிகாலையிலேயே கியூவில் பொதுமக்கள்காணப்பட்டார்கள்.

கொழும்பில் தற்காலிக வாசபர்மிட் உடையஅநேக வர்த்தகர்கள் தமது கடைகளைப் பூட்டி வைத்திருக்கிறார்கள். நேற்று ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாபெறுமதியான நோட்டுக்களை மாற்றிக்கொள்வதற்கு முயன்று கைதான டி. ஆர்.பி.க்காரர்சம்பந்தமாக கொழும்பில் பிரபல ஓட்டல் சொந்தக்காரர்கள் உட்படப் பல இந்தியப் பிரமுகர்கள் விசாரிக்கப்பட்டனர். (சி.பி.ஏ)

### புதிதாகமின்சார இணைப்பு வேலை

எழுதுமட்டுவாள், செவ்

கைதடிப் பகுதிக்கு புதிதாக மின் விளக்குகள் இணைக்க சுன்னாகம் மின்சாரப் பகுதியினர் முயற்சி எடுத்து வருகிறதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### நோட்டுகளை மாற்ற அவதி

பூநகரி, செவ்.

பூநகரி தபாற் கந்தோருக்கு இன்று காலை முதல் 100, 50 ரூபா நோட்டுக்களுடன் பலர் திரண்டுவந்துள்ளனர் என்று தெரியவருகிறது. பாடசாலை ஆசிரியர்கள் 100 ரூபா 50 ரூபா நோட்டுக்களே தபாற் கந்தோரிலிருந்தமையால் வேதனத்தைப் பெறுமல் திரும்பியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

ஒரு வருடகாலம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் ஒரு சிங்கள நபர் யோகப் பயிற்சி, தத்துவம், கலாசாரம், இலக்கியம், இனத்தொடர்பு ஆகியவற்றில் ஆர்வமுள்ள மக்களுடன் தொடர்பு கொள்ள விரும்புகிறார். எம். கே. அனவரட்ண, சுங்க இலாகா, யாழ்ப்பாணம். 2374

### விற்பனைக்கு

கார்

EY6496 ஒஸ்ற்றின் சோமசெற். ஒரே உரிமைக்காரன், கொம்பனியில் பழுதுபார்த்தது. 14,000 ரூபாவுக்கு மேல் அதிகமாய்க் கேட்பவர்களுக்கு, டாக்டர் மு திருவிளங்கம், 471, டெமட்டகொட வீதி, கொழும்பு-9. 2371

மூன்றாந்தவணை மாணவர் பயிற்சி பெறவும், N.P.T.A பரீட்சையில் சித்தி பெறவும் ஏற்றவை, வே. க. கந்தசாமி (புதுமைலோலன்) எழுதியவை ஐந்தாந்தர விஞப்பத்திரங்கள்-கணிதம், தமிழ், இந்துசமயம், ஆங்கிலம், சூழல் ஆகிய எல்லாப் பாடங்களுக்கும் ஆக்கப்பட்டுள்ளன. விலை சதம் 60. கூடுதலாக எடுப்பவர்களுக்குக் கழிவுண்டு. எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். 2339

### தேவை

வேலை:

ஆங்கிலம், தமிழ் G. C. E. சித்தியடைந்தவரும் சிங்களம் நன்றாகப் பேசக்கூடியவரும் திறமையான நற்சாட்சிப்பத்திரங்களுடையவர்க்கு (வயது 38) வேலை தேவைப்படுகிறது. விளம்பர இல: 2367, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2367

கொழும்பில் மின்சாரயந்திர தொழிற்சாலையில் வேலைசெய்த நல்நடத்தையுடையவருக்கு வேலை தேவை. விளம்பர இலக்கம் 2368 மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 2368

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

1-1-1971 தொடக்கம் 31-12-1971 வரை கீழ் வருவனவற்றிற்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 10-11-70-ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 3-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. கருவாட்டுக்கடை இல. 18, பெரியகடை
2. பெரிய கடை மரக்கறிச் சந்தையிலுள்ள 37ஏ, 44, 106 ஆகிய எண்ணுள்ள முழுக் கடைகள்.
3. பெரியகடை மரக்கறிச் சந்தையிலுள்ள 117-ம் இலக்க முக்கால் கடை.
4. பெரியகடை மரக்கறிச் சந்தையிலுள்ள 87ஏ, 89 ஏ ஆகிய எண்ணுள்ள அரைக் கடைகள்.

கேள்விப்படிவங்கள் 9-11-70-ந் திகதி திங்கட்கிழமை பி. ப. 3-00 மணி வரை வழங்கப்படும். கேள்விப்படிவம் ஒன்றின் விலை ரூ. 5/- அதற்குரிய பிணைப் பணம் ரூ 25/-

இதர விபரங்களை மாநகர அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்

ஏ. ரி. சுந்தரம்
மாநகர ஆணையாளர்
மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
26-10-70 2530


**மனோஹரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 4 காட்சி
ஜெய்சங்கர்- கே. ஆர் விஜயா நடித்த
**பெண்ணை வாழ விடுங்கள்**



**வெலிங்டன் சினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
எம். ஜி. ஆர்-பத்மினி நடித்த
**புதுமைப்பித்தன்**



**ஸ்ரீ காலிங்கன் இணுவில்**
தினசரி 2-00, 6-00, 9-30
எம். ஜி. ஆர். ★ பானுமதி நடித்த
மலைக்கள்ளன்


### மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# "3 தடவை எனக்கு வேலை செய்தீர் இம்முறை ஏன் செய்யவில்லை?"

## அழகக்கோன் கேட்டதாக பிலிப் பிரான்சிஸ் சாட்சியம்

யாழ்ப்பாணம், செவ்

"3 தடவை எனக்கு வேலை செய்தீர் இம்முறை வேலை செய்யாததற்குக் காரணம் என்ன என்று அழகக்கோன் கேட்டார். ரஹிம் முதலில் என்னைச் சந்தித்ததால் அவரை ஆதரிக்கத் தீர்மானித்துவிட்டதாகச் சொன்னேன்."

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கில் எதிர்மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் ஏச். டி. தம்பையா குறுக்கு விசாரணை செய்கையில் பிரான்சிஸ் றேச் மேற்கண்டவாறு கூறினார்

பிரான்சிஸ்றேச் மேலும் கூறியதாவது: 65-ம் ஆண்டு தேர்தலில் நான் அழகக்கோனை ஆதரித்தேன். மனுதார் இந்தமுறை முதலில் வந்துகேட்டபடியால் அவரை ஆதரிக்கத் தீர்மானித்தேன். மற்றொரு காரணமும் இருந்தது. மற்றக்காரணத்தை அழகக்கோனுக்குச் சொல்லவில்லை. எனது மனதிற்குள் இருந்தது. 'நாங்கள் எல்லோரும் கத்தோலிக்கர் ரஹிம் ஒரு முஸ்லிம். அதனால் எனக்கு வேலைசெய்ய வேண்டும்' என்று அழகக்கோன் சொன்னார்.

வழ: அஸிஸ் தான் ஒரு முஸ்லிம் என்றார்?- ஆம்

வழ: அழகக்கோன் நல்ல மனிதர் என்பதற்காக ஆதரிப்பதாக அசீஸ் கூறினார்?- ஆம்.

வழ: முஸ்லிம்கள் உங்களை ஆதரிப்பதால், கத்தோலிக்கரான நான் முஸ்லிமான ரஹிம் ஆதரிப்பதில் தவறென்ன என்று சொன்னீரா?- நான் சொன்னேன்.

வழ: அசீஸ் சொன்னார் ஒருகத்தோலிக்கர் மற்றொரு கத்தோலிக்கரை ஆதரிக்காமல் விடுவது நல்லதல்லவென்று?- ஆம்.

வழ: முஸ்லிம் ஒருவர் முஸ்லீமை ஆதரிக்காமல் விடுவது நல்லதல்லவென அசீஸிடம்கூறினீரா?-வார்த்தையை வளர்த்துக்கொள்ள நான் விரும்பவில்லை.

வழ: கதைத்துக் கொண்டு போனார்கள்? -ஆம்.

வழ: மூன்றாவது இடம்?- உப்புக்குளம். எப்பொழுது? அடுத்தநாள்.

வழ: யாரைக் கண்டீர்?- அஸிஸ் மரைக்காரையும், அழகக்கோனையும்.

வழ: நீர் அங்கு என்ன செய்தீர்?- கடைத்தெருவால் இருந்து போவதாக இருந்தால் உப்புக்குளத்தை தாண்டித்தான் போகவேண்டும்.

வழ: காலையிலா மாலையிலா?- காலையில்.

வழ?- காரில் போனார்களா? நடந்து போனார்கள்.

வழ: இந்தக் கோர்ட்டில் சொன்ன சாட்சியம் பொய் என்கிறேன்?- இல்லை.

மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் இசடீன் முகமட் சாட்சியை மறு விசாரணை செய்தார்.

வழ: 68-ம் ஆண்டிற்குப் பின் மன்னார் பட்டின சபைக்கு தேர்தல் நடந்ததா?- ஆம்'

வழ:- நீங்கள் போட்டி போட்டீரா?- இல்லை.

வழ:- நீர் இருப்பது எங்கே?- பள்ளிமுனை.

வழ: உமது கிராமத்தில் பலரிடம் வள்ளங்கள் உண்டு ஆம்.

வழ: மற்றவர்களிலும் பார்க்க உம்மிடம் கூட வள்ளங்கள் உண்டா?- சரிசமனாக இருக்கும்'

வழ: மன்னார்ப் பட்டின சபையில் 7 அங்கத்தவர்கள்? ஆம்

வழ: 68-ல் நீர் உபதலைவராக இருந்தீர்?- ஆம்.

வழ: உபதலைவர்கள் ஒவ்வொரு வருடத்திற்கு இருப்பார்கள்?- ஆம்.

வழ: போட்டி போட்டு வரவில்லை? ஆம்.

வழ: ரஹீமுடன் ஏதாவது உடன்பாடு செய்தீரா? இல்லை.

வழ: கடந்த தேர்தலில் யாரையும் ஆதரிப்பதற்கு சுதந்திரமாக இருந்தீர்? ஆம்.

வழ: கடந்த தேர்தலில் வாக்குகளைப் பெறக்கூடிய செல்வாக்குடையவராக இருந்தீர்?- ஆம்.

வழ: எங்கு?- எங்கள்பகுதியில் மாத்திரம்

வழ: அழகக்கோனும் சிலரும் ஆதரவு தேடி வந்தார்கள்?- ஆம்.

வழ: அன்று 1975-ம் ஆண்டு தேர்தல் பற்றி கதைத்தீர்களா?- இல்லை

விசாரணை 30-ம் தேதி காலை 10 மணிவரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**புதன் 28-10-70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 திரைகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 மாணவர் மன்றம்

இரவு 6-15 இசைப் பயிற்சி, 6-30 விவசாய நிகழ்ச்சி, 6-45 சுகாதார நிகழ்ச்சி, 7-00 கிராமியப் பாடல்கள், 7-30 வயலின் 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர் சேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு

### நேரத்துக்கு பஸ் கிடையாதா?

எழுதுமட்டுவாள், செவ்

எழுதுமட்டுவாள் இராமநாதன் மகாவித்தியாசாலை மாணவிகள் பாடசாலைக்குச் சென்று திரும்ப பஸ் கிடைப்பதில்லையென தெரிவித்துள்ளனர். சில தினங்கள் பஸ் கிடையாமையால் காலை 9 மணிக்கு வீட்டுக்கே திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாம்,

### இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 11-ந் திகதி (28-10-70)

மேஷம்- ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் வேறுவிதமாக அமையக்கூடும். திரைமறைவில் சில சூழ்ச்சிகள் இடம்பெறும்.

ரிஷபம்- பிதாவழிமூலம் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறும். பெரியோர்கள் சகவாசத்தால் மதிப்பு உயரும்

மிதுனம்- செய்தொழில் மூலம் சிறப்புக்கள் கிடைக்கும். பெரியவர்கள் ஆசி அவசியம் உண்டு. போட்டா போட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும்

கடகம்- இரக்கசிந்தை மேலிடும். பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெரிய இடத்து தொடர்புகள் ஏற்படுவதற்கும் இடம் உண்டு


**ஆர். வி. ஜி பீடி**
பாவிக்கும் அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்
ஓர் முக்கிய அறிவித்தல்


### வைத்திய சான்றுப் பத்திரம் வழங்கிய

## டாக்டருக்கும், எதிரிக்கும் 'சமன்ஸ்' வழங்க உத்தரவு

முல்லைத்தீவு, செவ்வாய்

முள்ளியவளை கிராமசபை தலைவர் முத்தர் அரியகுட்டி என்பவர் அதே ஊரைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பொன்னம்பலம் என்பவருடைய கடையில் வைத்து பொன்னம்பலத்தைத் தாக்கியதுடன் அவரது உடைமைகளுக்கும் நஷ்டம் விளைவித்ததாக முல்லைத்தீவுப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு, முல்லைத்தீவு மேலதிக நீதிபதி ஜனாப் ஏ. எம். ஐ. சக்ட் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரி நீதிமன்றத்துக்கு வரமுடியாத நிலையில் உள்ளதாகவும், அவருக்குச் சுகவீனம் என்றும் அவரது வழக்கறிஞர் கோர்ட்டில் கூறவே, வழக்காளி சார்பில் ஆஜரான அட்வக்கேட் அரசுவால்டன் அதனை ஆட்சேபித்தார். அவர் பல தடவைகளாக கோர்ட்டை மதியாது வராதிருப்பதால் அவர் மீது 'வாரண்ட்' பிறப்பிக்க வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து நீதிபதி வைத்திய அத்தாட்சிப்பத்திரம் வழங்கிய பருத்தித்துறையைச்சேர்ந்த வைத்தியருக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு (சமன்ஸ்) அனுப் மாறும் எதிரியையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிட்டு மேல்விசாரணையை அடுத்த மாதம் 7-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

### கடத்தல் பொருட்கள்

லவ்வெட்டித்துறை, செவ்

யாழ்ப்பாணம் பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை வீடொன்றில் சுமார் 17,000 ரூபா பெறுமதியான அக்கோ, மணிப்புரி, நைலெக்ஸ் ஆகிய வெளிநாட்டு சேலைகளைக் கைப்பற்றி அவ்வீட்டிலுள்ள பெண்மணி ஒருவரையும் கைதுசெய்தனர்.

0 0 0

பருத்தித்துறை கற்கோவளம் கடற்கரையில் வைத்து கராம்பு, பாக்கு, சாதிக்காய்பூ முதலியன கொண்ட 56 மூடைகளையும் ராணுவத்தினர் கைப்பற்றினர். துப்பாக்கிமுனையில் கைப்பற்றப்பட்ட இம்மூடைகள் யாவும் பருத்தித்துறை சுங்க இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டு விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது இதுசம்பந்தமாக எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை

### மாணவர் மன்றம்

புங்குடுதீவு, செவ்.

புங்குடுதீவு சிறீ இராஜஇராஜேஸ்வரிவித்திய சாலை மாணவர்மன்றம் பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர் திரு சு யோ பூராசா தலைமையில் நடைபெற்றது. தலைவராக ஆசிரியர் சு யோ பூராசாவும், செயலாளராக செல்வன் க குலேந்திரனும் துணைச் செயலாளராக செல்வன் சோ சந்திரமோகனும் பொருளாளராக செல்வி நா பிரபாவும் 7 பேர் கொண்ட செயற்குழுவும் மாணவநீதிமன்றத்தினரால் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

......

### புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன்

வண்ணார்பண்ணை நாவலர் ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தின் 5-வது வருடாந்தக் கூட்டம் நாவலர் மகா வித்தியாலயத்தில் திரு. சி. பரம்தில்லைராசா தலைமையில் நடைபெற்றது

புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர் தலைவர்: திரு. சி. பரம்தில்லைராஜா உபதலைவர் திரு. வி. ஏரம்பமூர்த்தி, செயலாளர்: திரு. வ கந்தசாமி உபசெயலாவர்: திரு ஏ. கோவிந்தராஜ் நிர்வாகசபை அங்கத்தவர் ஐவர் தெரிவு செய்யப்பட்டனர்,


கவர்ச்சிகரமான
**தீபாவளி மலிவு விற்பனை**
எம்மிடம் கட்டுப்பாட்டு விலையில் பின்வரும் பொட்டுக்கள் விற்பனையாகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். ஜி. ஆர். ★ பானுமதி

நடித்த

# மலைக்கள்ளன்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர் — லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த

# மாட்டுக்கார வேலன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன்-காஞ்சனா
நாகேஷ்-மஞ்சுளா
நடித்த

# சாந்தி நிலையம்

## வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி

கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த

# உயர்ந்த மனிதன்

கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.


வழ: முஸ்லிம் ஒருவர் முஸ்லிமை ஆதரிக்காமல் விடுவது நல்லதல்லவென அசீஸிடம் கூறினீரா?-வார்த்தையை வளர்த்துக்கொள்ள நான் விரும்பவில்லை.

வழ: அழகக்கோன் மார்சிலின் பெரேரா வீட்டிற்குப் போனார்?-ஆம்.

வழ: வேறுவீடுகளுக்குப் போனதைப் பார்த்தீரா?-இல்லை.

வழ: அழகக்கோனை அசீஸ் மரைக்காருடனும், உத்தினுடனும் 3 முறை கண்டீரா?- ஆம்.

வழ: எங்கே?- மன்னார் பட்டணத்தில்:

வழ:-எப்பொழுது தேர்தலுக்கு முன்னர்

வழ: என்ன நேரம்?-காலை 8-30 மணிக்கு.

வழ: நீர் எங்கேபோனீர்?-ஆஸ்பத்திரிக்கு.

வழ: இரண்டாம் தடவை எங்கே கண்டீர்?- அழகக்கோன், வைத்திலிங்கம் அசீஸ் மரைக்காரை கடைத்தெருவில் கண்டேன்.

வழ: காரில் கண்டீரா?-இல்லை.

வழ: எப்போது கண்டீர்? கணபதிப்பிள்ளை கடையில் சாமான் வாங்கிக்கொண்டு வரும்போது கண்டேன்.

வழ: கடைக்குள்ளே போனீரா?. ஆம்.


REGAL
Jaffna
Daily 4-45 7 & 9-45 p.m.
Poya days 4 Shows
James Stewart,
Raquel Welch
in
BANDOLERO



## ஆர். வி. ஜி. பீடி

பாவிக்கும் அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும்

## ஓர் முக்கிய அறிவித்தல்

-10-70 முதல் எமது ஆர். வி. ஜி. ...ளுக்கு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

சில்லறையாக பீடி வாங்குபவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள விலைக்குஎல்லாக் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

### சில்லறை விலை விபரம்

| | | |
|---|---|---|
| 2 பண்டல் பீடி | — | ரூபா 18-50 |
| 1 பண்டல் பீடி | — | ரூபா 9-25 |
| 1 கட்டு பீடி | | 55 சதம் |
| 2 பீடி | — | 5 சதம் |

2529 ஆர். வி. ஜி. பீடி தயாரிப்பாளர்,


## கேள்வி விளம்பரம்

### இ. போ. ச. சிற்றுண்டிச்சாலை

கோண்டாவில் — யாழ். டிப்போ

இலங்கை போக்குவரத்து சபை கோண்டாவில் யாழ். டிப்போ மேலதிகாரியால் கோண்டாவில் யாழ். டிப்போ சிற்றுண்டிச் சாலைக்கு உணவு, சிற்றுண்டி முதலியன விநியோகிப்பதற்கு விலைப்பட்டியலுக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர் திருப்பிப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10/- செலுத்தித் தேவைக்குரிய விண்ணப்பப் பத்திரங்களை கோண்டாவில் யாழ். டிப்போ மேலதிகாரியிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகளுக்கான விண்ணப்பங்கள் 10-11-70ம் திகதி பி. ப. 1 மணியுடன் முடிவடையும்.

2524

கடகம்- இரக்கசிந்தை மேலிடும். பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெரிய இடத்து தொடர்புகள் ஏற்படுவதற்கும் இடம் உண்டு.

சிம்மம்- ஏமாற்றங்கள் நிறைந்து காணப்படுகின்றன. சிறு தவறுதல் பெரிய நெருக்கடியை உருவாக்கலாம் எதிலும் முன்எச்சரிக்கையுடன் இருக்கவும்.

கன்னி-நிச்சயமற்ற நிலையால் வேலைப்படுவீர். எதிர் பார்த்த பொருள்வரவு இன்று தடைப்படலாம். நாவடக்கம் நன்று.

துலாம்- பொருளாதாரத் துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது. கொடுக்கல் வாங்கல்மூலம் அதிக ஆதாயத்துக்கு இடமுண்டு.

விருட்சிகம்- எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக்கூடும் சகோதர வழியால் சஞ்சலத்துக்கு இடமுண்டு,

தனுசு- பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும், உறவினர்கள் உற்சாகமான வரவேற்பைக் கொடுப்பார்கள்

மகரம்- கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும். இலட்சி நோக்குடன் காரிய மாற்றுவீர்கள் இனசன கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு.

கும்பம்- என்னதான் திறமைசாலியாக இருந்த போதிலும் இன்றுகோட்டை விடநேரிலா . சும்மா இருப்பதே சுகம்.

மீனம்- காதலர்களுக்கு கற்கண்டான தினம். குடும்பஸ்தர்கள் வாழ்வில் குதூகலம் தென்படும். உறவினர்கள் ஆதரவு தாராளமாக கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


## தீபாவளி மலிவு விற்பனை

எம்மிடம் கட்டுப்பாட்டு விலையில் பின்வரும் சேட்டுக்கள் விற்பனையாகின்றன. மக்கள் குவிந்த வண்ணம் இருப்பதால் திறமையான சேட்டுகளை தெரிவு செய்ய இன்றே முந்துங்கள்.

டயாறெசானு டியூரே பிளாக்ரேஸ். கப்ஸ்டன், மக்ஸிக்கானு - ஒக்ஸ்வேட் கன்டிறிற்ரேன் -ஸ்கைவே ஹென்லி சுப்றிமா

இன்னும் அனேக சேட்டுகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

முழுக்கையுடன் ரூபா 23/- அரைக்கையுடன் ரூபா 21/-

# றொலறம்ஸ்

46, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7099

கவர்ச்சிகரமான

## தீபாவளி மலிவு விற்பனை

எம்மிடம் கட்டுப்பாட்டு விலையில் பின்வரும் சேட்டுக்கள் விற்பனையாகின்றன. மக்கள் குவிந்த வண்ணம் இருப்பதால் திறமையான சேட்டுகளை தெரிவுசெய்ய இன்றே முந்துங்கள்.

டயா றெசானு-டியூரேபிளாக்ரேஸ், கப்ஸ்டன், மக்ஸிக்கானு - ஒக்ஸ்வேட் - கன்டிறிற்ரேன் -ஸ்கைவே-ஹென்லி சுப்றிமா

இன்னும் அனேக சேட்டுக்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

முழுக்கையுடன் ரூபா 23/- அரைக்கையுடன் ரூபா21/-

# பொகுமால்ஸ்

(சேட் மாளிகை)

49, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

## இன்று முதல்-தீபாவளி வெளியீடு!

ராஜா (யாழ்ப்பாணம் — ஸெயின்ஸ்தான் (கொழும்பு) — சரஸ்வதி (திருமலை)

தினசரி 4 காட்சிகள்

ஏ. வி. எம். ராஜன் ★ புஸ்பலதா
சுந்தரராஜன் ★ மனோரமா
எம். ஆர் ஆர். வாசு ★ சோ
மற்றும் பலர் நடித்த

# செல்லப்பெண்

(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)

## தீபாவளி மலிவு விற்பனை

மணிப்புரிச் சேலைகள் ம. வி. 32-50க்கு மேல்
சரிகைக் கரைபோட்ட சோளி (12 நிறங்களில்) ம.வி. 10-க்கு மேல்
உங்களுக்குத் தேவையானவற்றை தெரிவு செய்வதற்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்

# டயரூம்ஸ்

54, 60, மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

## இஸ்ரேல் பிடித்த பகுதிகளை விடுவிக்கும்

# ஐ. அ. குடியரசு தீர்மானம் மீண்டும் ஐ. நா. வில் வலியுறுத்து

## ஐ. நா. வில் வெளியுறவு அமைச்சர் வலியுறுத்து

ஐ. நா. (நியுயோர்க்) அக். 27

இஸ்ரேல் வசப்படுத்திய தமது பகுதிகளை விடுவிக்க வேண்டுமென்ற தனது தீர்மானத்தை ஐக்கிய அரபுக் குடியரசு மீண்டும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மகா சபைக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய ஐக்கிய அரபுக் குடியரசு வெளியுறவு மந்திரி நேற்று இதனை மீண்டும் வலியுறுத்தினார்.

1967-ம் ஆண்டுக்குப் பின்னர் ஐ. நா. மகா சபையில் மீண்டும் நேற்று இப்பிரச்னை எழுப்பப்பட்டது.

இஸ்ரேலின் தந்திரமும், அமெரிக்கா ஆதரிப்பதும் தான் அமைதி ஏற்படாததற்குக் காரணம் என்று அரபுக் குடியரசு வெளியுறவுமந்திரி குற்றஞ்சாட்டினார்.

சூயஸ் பிரதேசத்தில் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவே சோவியத் படைகள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

இஸ்ரேல் தந்திரமாக நடந்து கொள்கிறதென்றும் அவர் அமெரிக்கா சமாதானத்துக்கு முழு முட்டுக்கட்டையாக நிற்கிறதென்றும் கூறினார்.

'இஸ்ரேல் வசப்படுத்திய எமது பகுதிகளைவிட்டு விலகவேண்டும். மேற்காஸிய நிரந்தரத்தீர்வுக்கு இது நல்லதொரு வழியாகும்' என்றும் ஐக்கிய அரபுக் குடியரசு வெளியுறவு மந்திரி சொன்னார்.

## வேண்டுமென்றே 'சேர்ச்' மீது விமானத்தை மோதினார்!

சான்ஜீவான், அக். 27

விமானம் ஓட்டும் பயிற்சியாளர் ஒருவர் இங்குள்ள ரோமன்கத்தோலிக்க தேவாலயத்தின் மீது வேண்டுமென்றே விமானத்தை மோதி விபத்து ஏற்படச் செய்தார்.

இப்பகுதியிலுள்ள கத்தோலிக்கமெதடிஸ்ட்தேவாலயங்களிலிருந்து அனைவரையும் வெளியேற்றுமாறு விமானி றேடியோ மூலம் செய்தி அனுப்பினார்.

பிரார்த்தனை செய்து கொண்டிருந்த பாதிரியும், 36 பேரும் மயிரிழையில் உயிர்தப்பினர். விமானி விபத்தில் இறந்துவிட்டார்.

## நாஸர் கல்லறைக்கு முன்னால் இந்திரா கண்கலங்கினார்!

கெய்ரோ, அக் 27

மறைந்த ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸரின் கல்லறைக்கு முன்னால் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும், புதிய ஜனாதிபதி அன்வர் சதாத்தும் கண் கலங்கினார்கள்.

ஐ. நா. மகாசபை 25வது ஆண்டு நிறைவுவிழா கூட்டத்தில்கலந்துகொண்டு விட்டு தாயகம் திரும்பும் வழியில் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா சிலமணி நேரம் கெய்ரோவில் நேற்றுத் தங்கினார்.

கெய்ரோ விமான நிலயத்தில் அரபுக் குடியரசு ஜனாதிபதி அன்வர்சதாத் நல்லெண்ண அடையாளமாக இந்திராவை வரவேற்றார்.

'நாஸர் ஒரு பெருந் தலைவர். நாட்டின் சுதந்திரத்துக்காக அயராது உழைத்த கண்ணியமிக்க ஒரு தலைவர். பாரதத்தின் நெருங்கிய நண்பர். அவர் இழப்புபேரிழப்பு' என்று இந்திரா மிகவும் கவலையுடன் அன்வர் சதாத்திடம் தெரிவித்தார்.

திருமதி இந்திரா விமான நிலயத்திலிருந்து நேராக ஜனாதிபதி சதாத்துடன் நாஸரின் கல்லறை இருக்கும் இடத்துக்குச் சென்றார். அங்கு நாஸர் கல்லறைக்கு இந்திரா மலர் வளையம் சாத்தி தமது அஞ்சலியைச் செலுத்தினார்: புதிய ஜனாதிபதி அன்வர்சதாத்தின் கண்கள் கலங்கிநீர்மல்கியது. இந்திராவும் கண்கலங்கினார். இது உருக்கமான காட்சியாக இருந்தது.

திருமதி இந்திரா இதன் பின்னர் திருமதி நாஸரைச் சந்தித்து தமது இரங்கலைத் தெரிவித்து, கவலை நிறைந்திருந்த அவரைத் தேற்றினார்.

### 75 நிமிடம் பேச்சு

மேற்காஸியப் பிரச்னை உட்படப் பல்வேறு பிரச்னைகள் குறித்து திருமதி இந்திரா ஜனாதிபதி அன்வர் சதாத்துடன் 75 நிமிட நேரம் பேச்சு வார்த்தை நடத்தினார்.

பாரதம்- ஐக்கிய அரபுக் குடியரசு இரு நாடுகளுக்கிடையேயும் நல்லெண்ணமும், நட்பும் மேலும் வளர வேண்டுமென்பதை பரஸ்பரம் இருநாட்டுத் தலைவர்களும் வற்புறுத்தினார்கள். திருமதி இந்திரா இன்று காலை 8 மணிக்குச் சற்றுப்பின்னதாக புதுடில்லி வந்து சேர்ந்தார்.

## சென்னையில் சர்வதேச தமிழ் ஆய்வுக்கழகம்!

### சிங்கப்பூரில் நெடுஞ்செழியன் தகவல்

சிங்கப்பூர், அக். 27

சென்னையில் சர்வதேச தமிழ் ஆய்வுக்கழகம் விரைவில நிறுவப்படவிருக்கிறது.

தமிழ் நாடுகல்வி அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் நேற்று சிங்கப்பூரில் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்கா, லண்டன், ஜப்பான், போன்றநாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட திரு. நெடுஞ்செழியன் நேற்று சிங்கப்பூர் வந்துசேர்ந்தார்.

யுனெஸ்கோ அதிகாரிகளுடன் தமிழ் ஆய்வுக்கழகமொன்றை சென்னையில் நிறுவுவது சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும், அடுத்தவருட ஆரம்பத்தில் அநேகமாக இக்கழகம் இயங்க ஆரம்பிக்குமென்றும் திரு. நெடுஞ்செழியன் சிங்கப்பூரில் நிருபர்களிடம் தெரிவித்தார். யுனெஸ்கோ அதிகாரிகளில் ஒருவரான ஆதிசேஷையாவுடன் ஆய்வுககழகம்பற்றி பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும், சென்னையில்நிறுவுவது சம்பந்தமான முழுநடவடிக்கைகளையும் அவர்மேற்கொள்வாரென்றும் நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

சிங்கப்பூரிலிருந்து நாளை நெடுஞ்செழியன் தமிழகம் வந்துசேருவார்.

பதவி உயர்வு



யாழ்ப்பாணம் கூட்டுறவு திணைக்களத்தில்கடமையாற்றிய திரு. வி எஸ். இராமநாதன் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக பதவியுயர்வுபெற்றுள்ளார். இம்மாதம் 23-ம் திகதியிலிருந்து வவனியாவுக்கு இவர் இ...

## "வடக்கு, கிழக்கில் பொருளாதாரத்தைப் பாதுகாக்க ...."

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள இயற்கைவளங்கள் பல பயன்படுத்தப்படாத நிலையில் பாழாகிப் போகின்றன. இவ்வளங்களை நாம் முறையாகப் பயன்படுத்தினால் நிச்சயமாக அவற்றில் தன்னிறைவு காணமுடியும். சிறப்பாகப் பனைப்பிரயோசனங்களை நாம் பயன்படுத்துவதில்லை கற்பகதரு என்று பெருமைப்படுகிறோமே தவிர அதனால் கிடைக்கும்ஏகப்பட்ட பலன்களைச் சரியான முறையில் விஞ்ஞான முன்னேற்ற உத்திகளைப் பாவித்துப் பெற்றுக்கொள்கிறோமோ என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். சமீபத்தில் நான் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்திருந்தபோது அங்கே தமிழக பனை ஆராய்ச்சி நிலயம் செய்துவரும் அரிய பணிகளைக்கண்டு வியந்தேன் வேண்டுமானால் அதே முறைகளை நாமும் பயன்படுத்தலாம். நாம் அடுத்த வருடம் யாழ்நகரில் நடத்தவிருக்கும் பிரமாண்டமான கண்காட்சி இதுசம்பந்தமாக மக்கள்மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த உதவும்.

இவ்வாறு பேராசிரியர் தொடர்ந்து கண்காட்சியின் அவசியத்தை வலியுறுத்திப் பேசியதோடு அதன்தொடர்பாக மரம நாட்டுதல் குடிசைக்கைத்தொழில்கள் ஆரம்பித்தல் போன்றவற்றுடன் யாழ் குடாநாட்டில் நீர் பாதுகாப்புப் பிரச்சாரத்திலும் மன்றம் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தான் சமீபத்தில் சென்று திரும்பியநாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தினைப் பற்றிக் குறிப்பிட்ட அவர் அந்நாடுகளின் சிறு கைத்தொழில்கள் அடைந்துள்ள அபிவிருத்தியினையும் அங்கு எவ்வாறு வளங்கள் வீணாக்காது பயன்படுத்தப்படுகின்றன என்பது பற்றியும் எடுத்து விளக்கினார் வடக்கு கிழக்கின் பொருள் வளம் பாதுகாக்கப்படுவதற்காக நகரங்கள் தோறும், பிரச்சாரக் கூட்டங்கள் நடாத்தியும் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டும் மக்கள்மத்தியில் புதிய எழுச்சியை உருவாக்கவேண்டும் என்று தெரிவித்த இவர் பாதை ஓரங்களில் புளி, பனை போன்ற பயன்தரும் மரங்களை நாட்டவேண்டும் எனவும் இவை தற்போது அருகிவருவது கவலைக்குரியது என்றும் சொன்னார்.

## 'இந்து சமய வளர்ச்சிக்கு கூடிய உதவி செய்வோம்'

### கலாசார அமைச்சர் அளித்த உறுதிமொழி

கொழும்பு, செவ்வாய்

"இந்து சமயத்துக்கும் கலாசாரத்துக்கும் தன்னாலானதனைத்தையும் செய்ய இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது. அதன் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும்' என்று இந்துசமய ஆலோசனைச் சபையின் முதல் கூட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், கலாசார அமைச்சர் குலதிலகா உறுதி கூறி, அரசாங்கத்துடன் இந்துக்கள் ஒத்துழைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் இந்துசமயத் ... காரியதரிசி நவரத்தினம் செய்துள்ள அரிய பணிகளுக்காக ஈழத்து இந்து சமூகத்தினரின் நன்றி அவருக்கு உரித்தாகும்.

அன்று கூட்டத்தில் கலாசார அமைச்சர் குலதிலகா நிரந்தரக்காரியதரிசி நிஸங்கா விஜயரத்ன, சுவாமி பிரேமத்மானந்தா உட்பட சுமார் 25 அங்கத்தவர்களும் வந்திருந்தனர் புதியதலைவர் திரு வி. சிவசுப்பிரமணியம் அரசாங்கத்துக்கும் அமைச்சர் முதலியவர்களுக்கும் நன்றி தெரிவித்தார். ஆவர் நாவலர் சபை, இந்து மாமன்றம் இந்து சமய ஆலோசனைசபை இம்மூன்று ஸ்தாபனங்களின் தலைவராக 'முடி சூட்டப்பட்டுள்ளது' குறிப்பிடத்தக்கது.

அவசர விஷயங்களை கவனிப்பதற்காக 5 உபக் குழுக்கள் நியமிக்கப் பெற்றன. இச்சபையின் அடுத்த கூட்டம் நவம்பர் 20-ம் திகதி நடைபெறும்.

## வலது குறைந்தோருக்கு

## தமிழக மந்திரியை கவர்ந்த பிரிட்டிஷ் பாடசாலைகள்!

லண்டன், அக். 27

அண்மையில் ... திற்கு ... நாடு கல்வி சுகாதார அமைச்சர் ... வி. ஆர். நெடுஞ்...

## "தமிழ் புறக்கணிக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் குலதிலகா உறுதி கூறி, அரசாங்கத்துடன் இந்துக்கள் ஒத்துழைக்கவேண்டு மென்றும் கேட்டுக்கொண்டார்.

இலங்கையில் இந்துசமயத்துக்கான ஓர் ஆலோசனைச் சபையை முதல் முதலாக ஆரம்பித்தது காலஞ்சென்ற பண்டாரநாயக்காவின் அரசாங்கத்திதான். திரு. ஜயவீரகுருப் முதல் கலாசார அமைச்சராக இருந்த காலத்தில் சேர் அருணாசலம் மகாதேவா இச்சபையில் முதல் தலைவராக நியமிக்கப்பெற்ருர். சென்ற 14 வருடங்களில் இச்சபை பல நல்ல பணிகளைச் செய்துள்ளது. தீவிலே 145 ஊர்களில் இந்த சபைகள் ஆரம்பிக்கப்பட்டன. சுப்ரீம்கோர்ட் றிஜிஸ்திராரும் சபைக் காரியதரிசியுமான என், நவரத்தினம், புரக்டர் எஸ். சிவசுப்பிரமணியம், புரக்டர் சோமசுந்தரம் ஆகிய இவர்கள் மூவரும் பல ஊர்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்து, ஆங்காங்கே இந்து சபைகளை ஆரம்பித்தனர். இந்துசமய நூல்களான திருவெம்பாவை, தேவாரம் முதலிய நூல்களை அச்சடித்து இலவசமாக விநியோகித்தனர். சமய உபந்நியாசங்கள் செய்யவும், பண்முறையில் தேவாரம் கற்பிக்கவும் ஒழுங்கு செய்தனர். ஒரு பல்கலைக் கழகம் ஆரம்பிக்கவும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டனர். பணம் போதிய அளவு இருந்திருப்பின் இச்சபை அதிக பணிகள் செய்திருக்கலாம், என்ருலும் சென்ற 14 வருட காலத்தில் இச்சபை இந்து சமய விஷயமாகச் செய்துள்ள பணிகளுக்காக, இந்து சமூகத்தின் நன்றி அதற்கு உரியதாகும்.

இந்துக்களை நல்ல இந்துக்களாகச் செய்வதே இச்சபையின் நோக்கம் என்று முன்ஞள் அமைச்சர் ஜயவீர குருப் கூறுவாராம். சமீபகாலத்தில் இந்துசமயத்தவரிடையே சமய உணர்ச்சி அதிகரித்து வந்துள்ளதைக் காணக்கூடியதாக வுள்ளது. ஆலயப்பிரவேச இயக்கம் வலுப்பெற்று பல ஆலயங்கள் இந்துக்கள் அனைவருக்கும் திறந்துவிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

0 0 0

சென்ற சனிக்கிழமை நடந்த ஆலோசனைச்சபைக் கூட்டத்தில், சபையின் புதிய தலைவராக முன்னுள் நீதியரசர் திரு. வி. சிவசுப்பிரமணியம் அமைச்சரால் நியமிக்கப்பெற்ருர். திரு வி. நவரத்தினம் காரியதரிசியாகப் போட்டியின்றி மீண்டும் தெரிவு செய்யப்பெற்ருர். சென்ற 14 வருடங்களாக

நிறுவனத்தின் புதிதலைவர் திரு வி. சிவசுப்பிரமணியம் அரசாங்கத்துக்கும் அமைச்

இச்சபையின் அடுத்த கூட்டம் நவம்பர் 20-ம் திகதி நடைபெறும்.

## வலது குறைந்தோருக்கு புனர் வாழ்வுத்திட்டங்கள்!

லண்டன் அக். 27

டக்ளஸ் போடர் என்பவர் விமான விபத்தொன்றில் இரு கால்களையும் இழந்தவர். இருந்தும், அரச விமானப் படையில் சேர்ந்து பயிற்சிபெற்று விமான ஓட்டியாக வந்ததுமட்டுமல்லாது, இரண்டாம் உலக யுத்தத்தின் போது, விமானப் பறப்புகளில் அருஞ் சாதனைகள் புரிந்து எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியவர். இன்று உலக முழுவதிலுமுள்ள பல்லாயிரக் கணக்கான வலது குறைந்த மக்களுக்கு இவர் ஒரு நல்ல முன்மாதிரியாக இருந்து வருகிருர்.

இன்று பிரிட்டனில் வலது குறைந்த ஒவ்வொருவருக்கும் பயிற்சி வசதிகளையும், வேலை வாய்ப்புகளையும் அரசாங்கமோ அல்லது தன்னலத் திட்டங்களோ ஏற்படுத்திக் கொடுக்கின்றது

விபத்தொன்றில் தன் கை விரல்கள் யாவற்றையும் இழந்த ஒருவர் இன்று பிரிட்டிஷ் ஐரோப்பியன் ஏயர் வேஸ் கம்பனியில் உயர் அதிகாரியாக இருக்கிருர். கண்பார்வையை முற்ருக இழந்த இன்னுமொருவர், முக்கிய அரசாங்க இலாகா ஒன்றின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றுகிருர். படம் வரைவாளராகப்பணி புரிகிருர் இன்னெருவர். இவருக்கு முதுகெலும்பு வியாதி ஏற்பட்டு, படுக்கையிலேயே என்றென்றும்குப்புறப் படுத்திருக்கிருர். இருந்தும் மிக நுணுக்கமான பொறியல் வரை படங்களையெல்லாம் இவர் படுத்தபடியே வரைந்து வருகிருர். பிரிட்டன் இன்று வலது குறைந்தோருக்களிக்கும் அரிய சந்தர்ப்பங்களில் இவை சிலவாகும்.

பிரிட்டனிலுள்ள சட்டப்படி, 20-க்கும் கூடிய ஊழியரைக் கொண்ட எந்நிறுவனமும் மூன்று விகித வலது குறைந்த ஊழியரை வைத்திருக்க வேண்டும். இதனுல் அந்நிறுவனத்தின் உற்பத்தித் தரம் சிறிதேனும் பாதிக்கப் படுவதில்லை. வீட்டுத் தளபாடங்கள் அமைத்தல், புத்தகம் கட்டுதல், சலவை செய்தல் நெசவுவேலை, சிப்பங்கள் அமைத்தல், மோட்டார் காரின் பாகங்களை உடுவமைத்தல் போன்ற பல வேலைகளில் இன்று வலது குறைந்தோர் ஈடுபட்டிருக்கின்றனர்.

பிரிட்டனின் தொழில் வசதி இலாகாவில் 600,000 வலதுகுறைந்தோர் பதிவாகியுள்ளனர். நாற்பத்திரண்டு அரசாங்க பயிற்சி நிலையங்கள், இவர்களுக்கு விசேஷ கைத்தொழிற்துறை வசதிகளை அளிக்கின்றன' கல்வித்தராதரமுடைய வலதுகுறைந்தோர், சர்வகலாசாலையில் படித்துப் பட்டம் பெறவும் வாய்ப்பளிக்கப்படுகிறது. தற்போது லண்டனுக்கருகாமையிலுள்ள லெதர் ஹெட்டில், கம்பியூட்டர் இயக்கம் பற்றிய பயிற்சிகளும் இவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

வலது குறைந்தோருக்கு பிரிட்டன் வகுத்துள்ள வேலைத்திட்டங்கள், பல வெளிநாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளன. நைஜீரியா, கானு, இந்தியா, பிரேஸில், மெக்ஸிகோ, பேரு, நைல், அர்ஜன்டீனு, அவுஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகள் இத்திட்டங்கள் பற்றிய கூடிய விபரங்களை கோரியுள்ளன, வலது குறைந்தோருக்குப் புனர்வாழ்வளிக்கும் வேலையில் பிரிட்டன், தற்போது தீவிரமாக ஈடுபட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

## கூட்டுஸ்தாபனம் ஆக்குக!

கோட்டை, செவ்வாய்

நாட்டில் உள்ள சகல ஓட்டுத் தொழிற்சாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் எனவும், கூட்டுஸ்தாபனமாக்கவேண்டும் எனவும் நீர்கொழும்பு மாநகர் சபை அரசாங்கத்தைக்கோரியுள்ளது. இந்தத் தீர்மானத்தை நீர்கொழும்பு மாநகர சபை உறுப்பினர் திரு. டபிள்யு. ஓ. பொங்சோ கொண்டுவந்தார்.

## இடமாற்றம்

ஊரதீவு, செவ்வாய்

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை ஆசிரியர்களான திருவாளர்கள் ஏ. தாமோதரம் பிள்ளை கே, தாமோதரம்பிள்ளை ஆகியோரும் புங்குடுதீவு சேர். துரைச்சுவாமி வித்தியாசாலை ஆசிரியர் திரு எஸ், பொன்னம்பலமும் புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாத மகா வித்தியாசாலைக்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்கள்

## டிஷ் பாடசாலைகள்!

லண்டன், அக். 27

அண்மையில் இங்கிலாந்திற்கு விஜயஞ்செய்த தமிழ்நாடு கல்வி சுகாதார அமைச்சர் திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் பிரிட்டனிலுள்ள பல்வகைப்பயிற்சி பாடசாலைகளின் செயல்திறன் பற்றி வெகுவாகப் பாராட்டினுர்

சாம்ராஜ்ய வெளிவிவகார அமைச்சின் விருந்தினராக இங்கு விஜயம்செய்த அவர் பிரிட்டன் கல்வித்துறை பற்றியும், சுகாதாரசேவை பற்றியும் நேரில் படித்தறிந்தார். லண்டனிலுள்ள பலவகைப் பயிற்சிப் பாடசாலைகளைப் பார்வையிட்ட அவர் லண்டன் சுகாதார நிலையம் ஒன்றிற்கும் விஜயம் செய்தார்.

இங்குள்ள பல்வகைப் பயிற்சிப் பாடசாலைகளின் போதனுமுறை தம்மை வெகுவாகக் கவர்ந்துள்ளதெனக் கூறிய அமைச்சர் பிரிட்டனைப் போன்று கல்வியில் சகலருக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டுமென்றும், தொழிலின் மகத்துவத்தை சிறுபராயத்திலிருந்தே உணர்ததிவிடவேண்டுமென்றும் கூறினுர்.

......

## மகஜர்

ஊரதீவு செவ்வாய்

''குறிகாட்டுவான் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தலைமை ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டுப் பல மாதங்கள் ஆகியும் இதுவரை தலைமை ஆசிரியர் நியமிக்கப்படவில்லை எமது பிள்ளைகளின் கல்வியிற்சிரத்தை காட்டிதலைமையாசிரியர் ஒருவரையும் ஆங்கில ஆசிரியர் ஒருவரையும் நியமிக்க நடவடிக்கை எடுக்கவும்'' எனக் கோரும் மகஜர் ஒன்றை குறிகாட்டுவான் நடுவுத்துருத்தி கிராம முன்னேற்றச்சங்கம் தீவுப் பகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு, கா. பொ இரத்தினத்துக்கும் தீவுப் பகுதி லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளருக்கும் அனுப்பிவைத்துள்ளது,

......

இசைத்துறை

## கருவிகளை ஆராய ஆய்வு கூடம்

கோட்டை, செவ்வாய்

இலங்கையில் இசைத்துறை ஆய்வுகூடம் ஒன்றை கல்வியமைச்சு அமைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

இசைத்துறை வாத்தியங்கள் பற்றி ஆராய்வதற்கு இந்த ஆய்வுகூடம் பயன்படுத்தப்படும் எனத் தெரிய வருகிறது.

## 'தமிழ் புறக்கணிக்கப் படுகிறது'

ஊரதிவு, செவ்வாய்

'தங்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நோக்குமிடத்து தமிழ் புறக்கணிக்கப்படுவதைக் காணமுடிகிறது. இவ் வருடம் ஆகஸ்ட்மாதம் இருபத்தோராம் திகதி நான் எழுதிய கடிதத்திற்கு தாங்கள் இதுவரை பதில் தரவில்லை. இதுபற்றிய காரணத்தை அறிய விரும்புகிறேன்.

இவ்வாறு தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு கா. பொ. இரத்தினம், பிரதமர்திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுள்ளார். இவர் தமது கடிதத்துடன், இது வரை காலமும் தனக்குத் தனிச் சிங்களத்தில் கிடைத்த அழைப்பிதழ்கள் கடிதங்கள் ஆகியவற்றையும் இணைத்துள்ளார்.

......

## விரைவில் நடமாடும் இரத்தவங்கிகள்

கோட்டை, செவ்வாய்

நடமாடும் இரத்த வங்கிகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்பட விருக்கின்றன.

வைத்திய சாலைகளில் ஏற்படும் இரத்தத்தட்டுப்பாட்டை நீக்கும் முகமாகவே மேற்படி நடமாடும் இரத்த வங்கிகள் ஆரம்பிககப்பட விருக்கின்றன தற்போது கொழும்பு, யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் மட்டுமே நடமாடும் இரத்த வங்கிகள் உள்ளன. நாட்டின் இதர பாகங்களில் உள்ள நகரங்ளிலும் மேற்படி இரத்த வங்கிகளை அமைக்கச் சுகாதார அமைச்சு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

## பதவி துறப்புக் கடிதம் அனுப்பினுர்

அம்பன், செவ்

குடத்தனைக் கிராமசபையின் 11-ம் வட்டார அங்கத்தவர் திரு க. கந்தையா தனது அங்கத்துவ பதவி துறப்புக் கடிதத்தை யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் குடத்தனைக் கிராமசபைத் தலைவருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

தினைக்களத்தில் கடமையாற்றிய திரு. வி எஸ். இராமநாதன் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக பதவிவுயர்வுபெற்றுள்ளார். இம்மாதம் 23-ம் திகதியிலிருந்து வவனியாவுக்கு இவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

காலஞ்சென்ற 'ஸ்டேசன் மாஸ்டர்' திரு. விஜயரட்னத்தின் புதல்வரான இவர் தனது ஆரம்பகல்வியைமலாயாவிலும் அதன் பின்னர் கொக்குவில் இந்துக்கல்லூரி யாழ் இந்துக்கல்லூரி ஆகியவற்றிலும் பயின்ருர்.

1941-ம் ஆண்டு அரசாங்க எழுதுவினைஞராக தெரிவசெய்யப்பட்டு பலஇலாகாக்களில் கடமையாற்றினர் இதன்பின்னர் 1952-ம் ஆண்டு கூட்டுறவு இலாகாவில் சேர்ந்து கடமையாற்றி தற்போது ஆணையாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

## காலால் மிதிததும் நாகம் கடிக்கவில்லை!

யாழ்ப்பாணம், செவ்வாய்

நல்ல பாம்பின் வாலை சிறுவன் ஒருவன் மிதித்தும் பாம்பு சிறுவனைத் தீண்டாமல் அமைதியாகச் சென்றதாம்

கச்சாய் அறுகம்புலம்விநாயகர் கோவிலில் அண்மையில் நடைபெற்ற கூட்டுப்பிரார்த்தனைக்காக அடியார்கள் பலர் சென்றிருந்த போது அவர்களுடன் சென்றிருந்த சிறுவன் ஒருவன் தலவிருட்சத்தை வலம் வருகையில் தவறுதலாகப் பாம்பை மிதித்துவிட்டானும். ஆனுல் பாம்பு அமைதியாகச் சென்றுவிட்டதாம் (குவிம)

## மான் இறைச்சி வைத்திருந்தவருக்கு அபராதம்

மட்டுவில், செவ்

எட்டுருத்தல் மான்இறைச்சியை வைத்திருந்தவருக்கு, சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. வின்னராஜா ரூபா 30 அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை தேவசகாயம் என்பவர் 8 ருத்தல் மான் இறைச்சியை வைத்திருந்ததாகக் குற்றம்சாட்டி வனவிலங்கு பாதுகாப்பதிகாரி ஜனுப் எஸ், எம். எம். நிஷாரினுல் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

விடுக்கும் பிரமாண்டமான கண்காட்சி இதுசம்பந்தமாக மக்கள்மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த உதவும்.

இவ்வாறு பேராசிரியர் திரு. கா. குலரத்தினம் கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற இளந்தமிழர் முன்னேற்றமன்றக் கண்காட்சி ஆலோசனைக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப்பேசுகையில் கூறினர்.

மன்றக் காப்பாளரான பேராசிரியர் குலரத்தினம்

## 'வேறுதொழில் தரவும்'

### பிரதமருக்கு மகஜர்

மாவிட்டபுரம், செவ்

இரண்டரை வருடங்களுக்குமேலாக விவசாயப்படையில் கடமையாற்றி விவசாயத்தை முன்னேற்ற நாம் உழைத்துள்ளோம். எம்மை இப்படி வேலையால் நிறுத்துவது நீதியற்ற செயலகும் ஆகவே எமக்கு நீர்ப்பாசன மின்சக்தி பெருந்தெருக்கள் அமைச்சில் அல்லது காணி விவசாய அமைச்சில் தகுதிக்கேற்றவாறு வேலை வழங்க வேண்டும்'

இவ்வாறு கோரும் மகஜரொன்றை காங்கேசன்துறைத் தொகுதிக்குட்பட்ட 25க்கு மேற்பட்டவிவசாயப் படை வீரர்கள் ஒன்றுசேர்ந்து பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பியுள்ளனர்.

மகஜரின் பிரதிகள் நீர்ப்பாசன மின்சக்தி பெருந்தெருக்கள் அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா, காங்கேசன்துறை அபிவிருத்திகுழுத் தலைவர் திரு வி. பொன்னம்பலம்ஆகியோருக்கு அனுப்பபட்டுள்ளன.

## திறனுய்வுக் கழகம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில்திறனுய்வுக்கழகம் ஒன்று அமைக்கப்பட்டது இக்கழக நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் நியாயதுரந்தரர் திரு. ராஜராஜேஸ்வரன் தங்கராஜாஉபதலைவர் திரு. எஸ் தெய்வேந்திரன் செயளர் திரு. எஸ். செல்வநாயகம் தனுதிகாரி: திரு. வி. சற்குணபாகன் ஆறுபேர் கொண்ட கமிட்டியொன்றும் தெரிவு செய்யப்பட்டது,

கலை இலக்கிய அரசியல் ஆகியசகலதுறைகளிலும்அவ்வத்துறையினரை அழைத்து உரையாற்றுவிப்பதும் கருத்தப்பரிவர்த்தனை நடத்துவதும் இச்சமூகத்தின் நோக்கமாம்.

பாதை ஓரங்களில் புளி, பலா போன்ற பயன்தரும் மரங்களை நாட்டவேண்டும் எனவும் இவை தற்போது அருகி வருவது கவலைக்குரியது என்றும் சொன்னுர்.

......

## நனைந்த தபால்

அம்பன், செவ்வாய்

நாகர் கோயில் பகுதி மக்களுக்கு மழை காலங்களில் தபால்கள் மழையில் நனைந்த முறையிலேயே விநியோகம் செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுறது. இதுபற்றி நாகர் கோயில் உபதபாலதிபரிடம் விசாரித்தபோது தபால் சேவகர்களுக்கு ''மழை அங்கி'' வழங்கப்படாமையாலேயே இந்த நிலையேற்பட்டுள்ளதென்றும் இதுபற்றிச் சம்பந்தப்பட்டஅதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளதாகவும் கூறினுர்.

......

## சுதந்திரக்கட்சிக் கிளைகள்

உடுபிட்டி, செவ்

பருத்தித்துறைத்தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழு அங்குரார்ப்பணக் கூட்டம் பருத்தித்துறைக் கிளைக் காரியாலயத்தில் திரு வே. நாகநாதன் தலைமையில் நடைபெற்றது மத்திய குழு நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

தலைவர்: திரு வே நாகநாதன், உப தலைவர்கள்-திருவாளர்கள் கே எஸ் இராசையா, சி ஈஸ்வரலிங்கப் பெருமாள், எஸ் மீனுட்சிசுந்தரம், செயலாளர்: திரு வே. தி அரசு, உப பெயலாளர்ள்-திரு இ கிருஷ்ணராசா, திரு வே க வேலாயுதம் பிள்ள், திரு க வல்லிபுரம், தனுதிகாரி: திரு ஆர் அருளானந்தம்.

உடுப்பிட்டித் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்தியகுழு அங்குரார்ப்பணக்கூட்டம் திரு வி நடராசா தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் மத்திய குழு உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

தலைவர்- திரு வி நடராசா, உப தலைவர்கள்-திரு. நா கணேசசிங்கராசா, திரு. எம் ஏ சரவணமுத்து, திரு. ம வேலுப்பிள்ளை, பொதுச் செயலாளர்- திரு வி. ஸ்ரீபாலகணேசமூர்த்தி, உப செயலாளர்கள்- திரு பி. தியாகராசா, திரு நா. கிருஷ்ணகுமார், திரு க கிருஷ்ணசாமி, தனுதிகாரி- திரு, யோ திருச்செல்வமூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு (29-10-70) வியாழக்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் (30-10-70) வெள்ளிக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது

மணிவாக்கு

வாழ்வில் இன்பம் என்பது உன் நிழலைப் போன்றது. நீ நின்றால் அதுவும் நின்றுவிடும்- நீ அதைக் கடக்கவிரும்பினால் அதுவும் அசைய ஆரம்பிக்கும்'
—முகம்மது.


# ஈழநாடு

Elanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49. Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஐப்பசி மாதம்
11-ம் திகதி (28-10-70


## கட்டாய சேமிப்புத் திட்டம்

நாட்டுமக்கள் சேமிக்க வேண்டியதன் அவசியத்தையும் நாட்டிற்காக மக்கள் தியாகஞ்செய்ய வேண்டிய அவசியத்தையும் நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா தமது வரவு செலவுத் திட்ட உரையில் வற்புறுத்தியிருக்கிறார் மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் உழைப்பில் சிறிதளவாவது கட்டாயமாகச் சேமிப்பதற்கு அவரது வரவு செலவுத்திட்டம் வழிவகுத்திருக்கிறது. கட்டாயசேமிப்பும் நாட்டுக்காகத் தியாகம் செய்வதற்கு மக்களைப் பக்குவப்படுத்தவும் நமது தலைவர்கள் இதுவரை முன்வரத் தவறியதனால் இன்றைய அவலநிலை நாட்டுக்கு ஏற்பட்டது. நிதிஅமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா இக் குறையை நீக்குவதற்கு சரியான வழியை வகுத்திருக்கிறார்.

இந்தியா விடுதலையடைவதற்கு வழிகாட்டிப் போராட்டங்கள் பல நடத்திய காந்திமகான் நாடு விடுதலை பெறுவதற்கு மக்கள் மத்தியில் ஐக்கியம் நிலவவேண்டியதன் அவசியத்தையும் பிறரின் தயவை எதிர்பார்க்காது மக்கள் தாமே தங்கள் சுயஉழைப்பில் தங்கியிருக்கவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியதுமல்லாமல் அதற்கான நிர்மாணத் திட்டமொன்றையும் வகுத்துச் செயல்படுத்தினார். அவர் வகுத்த திட்டம் இந்தியாவில் இன்று செயல்படுகிறதோ பின்பற்றப்படுகிறதோ வென்பது வேறுவிஷயம் ஆனால் அவரது திட்டமும் அவர் வாழ்ந்துகாட்டிய முறையும் தான் இந்தியாவுக்கு மட்டுமல்லாது இலங்கை உட்பட ஆசிய ஆபிரிக்க நாடுகள் பலவற்றுக்கும் விடுதலை பெற்றுக்கொடுத்தன.

கஷ்டமின்றி நஷ்டமின்றி நமது நாட்டுக்கு அரசியல் விடுதலை கிடைத்தால்தான் உண்மையான நாட்டுப் பற்றும் நாட்டுக்காக உழைக்க வேண்டுமென்ற மனப்பான்மையும் பொதுவாக வளர்ச்சிபெறவில்லை. சமீபகாலத்தில் தேசியப் பற்று என்பது இன, மொழி, இந்தியத் துவேஷம் என்பதுதான் என்ற போலித் தேசிய மனப்பான்மையை சில தீவிரவாத அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் ஆதாயத்துக்காக உருவாக்கிவிட்டனர். போலித் தேசிய வாதம் நீண்டகாலத்துக்கு உழைக்கமுடியாது, அதனால் நாட்டுக்கோ நாட்டு மக்களுக்கோ எந்தவிதத்திலும் நன்மைசெய்ய முடியாது.

நாட்டின் அபிவிருத்திக்கும் நாட்டு மக்கள் அனைவரும் முன்னேற்றமடைவதற்கும் நிதி அமைச்சரின் வரவுசெலவுத் திட்டம் சரியான பாதையைக் காட்டியிருக்கிறது. இந்தப் பாதையைப் பின்பற்றுவதில் ஏழை எளிய மக்களும் சிறிது கஷ்டம் அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படத்தான் செய்யும். நாட்டின் நலன்கருதி கஷ்டத்தை ஏற்றுத் தியாகம் செய்வதற்குத் தங்களைத் தயார்செய்துகொள்ளவேண்டியது மக்களின் கடமையும் பொறுப்புமாகும்.

# தீபாவளிப் பரிசு வேண்டுமா?
# திருவாளர் ஸ்டீல்சனை கண்டுபிடியுங்கள்!

## 'ஈழநாடு' ஆதரவில் நடைபெறும் கலைவிழாக் காட்சிகள் வண்டிச்சவாரி, வாணவேடிக்கை யாவையும் கண்டு களியுங்கள்!



இவர் தான்
**திருவாளர் ஸ்டீல்ஸன்**

தீபாவளிப் பரிசாக நீங்கள் 100 ரூபா பெற வேண்டாமா?

இவரை நல்லாகப் பாருங்கள்! நாளை தீபாவளித்தினத்தில் இவரைக் கண்டுபிடித்து விட்டீர்களானால் உங்கள் கையிற் சுளையாக 100 ரூபா புதிய நோட்டுக் கிடைக்கும்.

இந்தந் தீபாவளிப்பரிசை உங்களுக்கு வழங்குபவர் யாழ்ப்பாணம் ஸ்டீல்ஸன் ஸ்தாபன அதிபர் திரு எம். பூபாலசிங்கம் ஜே பி.

திருவாளர் ஸ்டீல்ஸனை எப்படி நீங்கள் கண்டுபிடிப்பீர்கள்? தீபாவளியான நாளை காலை 8 மணியிலிருந்து மாலை 6 மணி வரை திருவாளர் ஸ்டீல்ஸன் யாழ்ப்பாண நகரத்தின் வீதிகளில் உலவுவார். அன்று மாலை யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் ஈழநாடு ஆதரவில் நடைபெறும் மாட்டுவண்டிச் சாவாரிப்போட்டியின் போதும் உங்கள் மத்தியில் நிற்பார். அவரைக் கண்டு பிடிப்பதற்குமுன் உங்களுக்கு நிபந்தனைகள் சிலவற்றைக் கூறவேண்டியுள்ளது.

திருவாளர் ஸ்டீல்சனை நீங்கள் கண்டுபிடிப்பதற்கு முன்னர் திருவாளர் ஸ்டீல்ஸனின் புகைப்படம் பிரசுரிக்கப்பட்ட நேற்றைய ஈழநாடு (27-10-70) அல்லது இன்றைய ஈழநாடு (28-10-70) நாளைய ஈழநாடு 29-10-70) பிரதிகளுள் எவற்றிலாவது ஒன்றின் ஒரேதினத்தில் வெளியான 3 பிரதிகள் உங்கள் கைகளில் இருக்கவேண்டும். கையில் வைத்திருக்கும் ஈழநாடு பத்திரிகைப் பிரதிகளால் நீங்கள் அடையாளம் கண்ட திருவாளர் ஸ்டீல்ஸனின் தோளிற் தடவி "நீங்கள் தான் திருவாளர் ஸ்டீல்ஸன் உங்களை அடையாளம் கண்டுகொண்டேன்" என்று அவரிடம் தெரிவிக்கவேண்டும்.

உங்களுள் ஒருவர் அடையாளம் கண்டால் திருவாளர் ஸ்டீல்ஸன் அதை ஒப்புக்கொண்டு அடையாளம் கண்டவரை அழைத்துச் செல்லுவார். பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் இதைக் குறித்துக்கொண்டு விழா அமைப்பாளர் ஒருவரிடம் ஒப்படைப்பார்.

அடையாளம் கண்டவருக்கு மாலை ஈழநாடு சார்பில் நடைபெறும் கலைவிழாவில் 100 ரூபாய் தீபாவளிப் பரிசாக வழங்கப்படும்.

திருவாளர் ஸ்டீல்ஸனைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈழநாடு ஊழியர்களோ, அவர்களின் குடும்பத்தவர்களோ, வடபகுதிப் பொலிஸ் உத்தியோகத்தர்களோ, அவர் குடும்பத்தினரோ ஈடுபடக்கூடாது.

## ஈழநாடு கலைவிழாகாண வாருங்கள்

தீபாவளிக்கலைவிழா நாளை மாலை யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்டிருக்கும் அரங்கில் நடை... 'பி' பிரிவில் முதலிடம் பெறும் வண்டிக்கு 200ரூபா பெறுமதியான ... மும் வழங்கப்படும். இதர பரிசுகளுமுள்ளன.

## நல்லைப்பதிக்கு அருகில் நவீன தபால் நிலையம்

### அமைத்துதருமாறு திரு.துரைராஜசிங்கம்வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன் தமிழர்களுடையபண்டைய ராஜதானியான நல்லூரில் அமைந்திருக்கும் புராதனப் பெருமை வாய்ந்த நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு நாட்டின்பல பாகங்களில் இருந்தும் பத்திரிகர்கள் வருவதுடன் வெளிநாட்டுப் பிரயாணிகள் யாத்திரிகர்களின் தொகையும் அதிகரித்து வருகிறது இவ்விதம் ஜனப்புழக்கம் மிகுந்த நல்லூரில் ஓர் அஞ்சல் நிலையம் இல்லாதிருப்பதால், தூர இடங்களில் இருந்து யாத்திரிகள் தமது சொந்த இடங்களுடன் தபால், தந்தித் தொடர்புகொள்ள முடியாது அவதிப்படுகிறார்கள்.

இதுவிஷயமாகஏற்கனவே பல மனுக்கள் அனுப்பப்பட்டிருப்பதோடு, சமீபத்தில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றமும் நல்லூர்க் கந்த சுவாமி கோவிலுக்குமுன்பாக ஓர் அஞ்சல நிலையத்தைத்திறந்துவைக்கும்படி ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. நவீன அஞ்சல்நிலையம் ஒன்றைக் கோவிலுக்கு அண்மையில் நிறுவுவதற்கு வண்டிய இடவசதியும் உண்டு. ஆகவே, கூடிய சிரத்தை எடுத்து, எதிர்காலத்தில் புனித நகராகப் பிரகடனம் செய்யப்படக்கூடிய தகைமை பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில் ஒரு நவீன அஞ்சல் நிலையத்தைத் நிறுவித்தரவேண்டும்.

இவ்வாறு வற்புறுத்தும் கடிதமொன்றைத் தபால் அமைச்சர் திரு. குமாரசூரியருக்கு யாழ்ப்பாண மாநகர துணை முதல்வர் திரு. ஆ துரைராஜசிங்கம் அனுப்பிவைத்துள்ளார்.

## ஆடு திருடினர்கள் ரூபா 500 பிணை

பூநகரி, செவ்

இரவில் ஆட்டைத் திருடி உரித்துச் சமைக்கமுற்பட்டதாகக் கூறப்படும் இருவரைக் கிராம சேவையாளர் கைதுசெய்து காரியாதிகாரி முன்னிலையில் ஆஜர் செய்தார்.

இச் சம்பவம் பூநகரிபரம் பன்கிராய் என்ற கிராமத்தில் நடைபெற்றது கிராம சேவையாளர் சந்தேகநபர்களை குறைமாதக் குட்டிகள் இறைச்சி தோல் ... வற்றைக் காவிக்கொண்டு வரச்செய்து அவர்களை பூநகரிக் காரியாதிகாரியிடம் ஒப்படைத்தார்.

ஆடு அம்பு என்பவருக்குச் சொந்தமானதென்று ...

## ஜயாரன் எழுதுவது:

(8-ம் கலத தொடர்ச்சி)

முன்பின் தெரியாத அந்தச் சிங்கள அதிகாரி, என்னை உள்ளே அழைத்து, நாற்காலியில் அமர்ந்து பேச்சைக் கேட்குமாறு அன்புடன் கூறினார்' எனக்கு வியப்பாக இருந்தது. "எனக்குச் சிங்களம் தெரியாதே" என்று கூறியதும் ஓர் 'இயர்போன்' கொண்டு வந்து கொடுத்து, மொழி பெயர்ப்பைக் கேட்குமாறு செய்தார்! தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் ஏககாலத்தில் மொழிபெயர்ப்புச் செய்கிறார்கள். அக்கருவி மூலம் தமிழ் அல்லது ஆங்கில மொழிபெயர்ப்பை உடனுக்குடன் தெளிவாகக் கேட்கமுடிகிறது. தேநீர் இடைவேளைக்காக சபை கலையும்வரை அங்கிருந்து ...

நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவின் வரவு-செலவுத் திட்டப் பேச்சை நேரில் கேட்க வேண்டுமென்று பலரைப் போல் எனக்கும் ஆசை தலைநகரில் இருப்பதாலும், இது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 'சோஷலிஸ 'பட்ஜட்' ஆனதாலும் அப் பொருளாதார நிபுணர் கூறுவதை முற்றிலும் கேட்டால் நம் நாட்டின் நிலைமை பற்றியும், நமது எதிர்காலத்தைக் குறித்தும் பல முக்கிய விஷயங்களை அறிந்து கொண்டு, அங்கு கண்டதையும் கேட்டதையும் உங்களுக்குச் சொல்லலாம் என்று ஞாயிற்றுக்கிழமை யன்று பகல் 2 மணிக்குப் பார்லிமெண்ட் சபைக்குச் செல்ல விரும்பினேன்.

உள்ளே செல்லப் 'பாஸ்' அல்லது 'டிக்கெட்' வேண்டும். 'ஈழநாடு' பத்திரிகைக்கு ஒரே ஒரு 'பாஸ்'தான். செய்தி அனுப்பும் நிருபருக்கு அது தேவை. வேறு பாஸுக்கு என்ன செய்யலாம்? இதைப்பற்றி யோசிக்கையில் ஓரன்பர், தான் இதற்குச் சுலபமாக ஒழுங்கு செய்யலாமென்றும், 2மணிக்கு, பார்லிமெண்ட் மாளிகைக்கு வரும்படியும் சொன்னார். குறித்த நேரத்தில் அங்கு சென்றபோது, அந்த அன்பரைக் காணவில்லை. அரை மணி சாத்திருந்தேன். அந்த நண்பர் வரக் காணோம். பின்னர் விசாரித்ததில் உள் நுழைய 'பாஸ்' கிடைக்காமல் திரும்பிவிட்டதாக அறிந்தேன். பாவம்!

அடித்தளத்திலே முன்புறமுள்ள மண்டபத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் காத்திருந்தார்கள். சினிமாச் சாலைகளில் 'ஹவுஸ்புல்' என்று விளம்பர அட்டையைத் தொங்கவிடுவார்களே அதுபோல், "எல்லாக் கலரிகளும் நிரம்பிவிட்டன" என்று மூன்று மொழிகளிலும் அச்சிட்ட அட்டை அங்கு எதிரே சுவரில் 'திரும்பிப் போங்கள்' என்று கூறாமல் கூறியது. என்றாலும் முன்வைத்த காலைப் பின்வைக்க மனமில்லை. எப்படியும் உள்ளே போகலாம் என்ற ஏதோ குருட்டு நம்பிக்கை. ஒரு எம். பி க்குத் துண்டு எழுதி அனுப்பினால் அவர் தம் பொறுப்பில் 'டிக் கெட்' ...

அதிகாரி நினைவில் வைத்துக் கொண்டு, அந்த நம்பரை அழைத்ததும், என்னிடம் அதைத் தெரிவித்தார். போலீஸார் இவ்வளவு உதவி செய்ததைக் கேட்டு என் மனம் அவருக்கு மிகவும் நன்றிசெலுத்தியது.

சிங்களம் தெரியாவிட்டால் நாம் அங்கு ஊமையாகவும் செவிடராகவும் ஆகிவிடுகிறோம் அங்கு யார் தமிழர்? யார் சிங்களவர்? என்பதும் தெரியவில்லை. யாரைப் பார்த்தாலும் ஒரே மாதிரித்தான் உள்ளது! ஆங்கிலத்தில் கேட்டால், நம்மை ஒருமாதிரிப் பார்க்கிறார்கள் அவர்களுக்கு அம்மொழி தெரியாதுபோலும் பதில் பேசுவதும் இல்லை. வசதியான ஆசனங்கள் அங்கு போட்டுள்ளனர். புத்த பிக்குகள் பலர் வந்து டிக்கெட்டுக்காகக் காத்திருந்தனர். அவர்களை எல்லாம் பார்க்கும்போது எனக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தது.


முடிவில் என் 'நம்பரை' ஆங்கிலத்தில்தான் சொல்லி அழைத்ததாக அறியவந்தேன். துண்டைச் சிங்களத்தில் எழுதியிருந்தால் சிங்களத்திலும், ஆங்கிலத்தில் எழுதியிருந்தால் ஆங்கிலத்திலும் அறிவிக்கின்றார். அந்த அதிகாரி தமிழில் துண்டை யாரும் எழுதவில்லைப்போலும்! என் நம்பரைக் கேட்டதும் அனுமதிச் சீட்டுத்தான் வந்துவிட்டதோ என்று துள்ளித்துள்ளிக்கொண்டுபோய் அந்த அதிகாரியிடம் கேட்டேன். அவர் என் நம்பருள்ள துண்டைத் தேடி எடுத்து, என்னிடம் தந்தார். "நான் வருந்துகிறேன். எனக்குரிய டிக்கெட்டை முன்பே எடுத்துவிட்டேன்" என்று அதே துண்டில் எழுதிக் கையெழுத்திட்டு அனுப்பியிருந்தார் அந்த எம். பி. அன்பர். அதற்குப் பின்புறத்தில் "ஒரு அதிகப்படி டிக்கெட் கொடுப்பது சாத்தியமா?" என்று காவல் அதிகாரியை எழுதிக் கேட்டிருந்தார். சாதாரணமாக ஒரு எம். பி.க்கு இரு சீட்டுக்கள் வழங்குவராம், ஆனால் 'பட்ஜட்' நாளில் பெரும் கூட்டத்தை முன்னிட்டு, ஒரு எம் பி.க்கு ஒரு டிக்கெட்தான் அனுமதித்தனராம். ஆகவே எனக்குக் ...

## பல்கலைக்குரிசில் கனகசபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுவிஷயம் ஆனால் டியது மக்களின் கடமை
அவரது திட்டமும் அவர் யும் பொறுப்புமாகும்.

# பல்கலைக்குரிசில் கனகசபை



''தோன்றிற் புகளொடு தோன்றுக'' என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய இவ்வுலகில் தோன்றிய ஒருசிலருள் ஒருவராக விளங்குபவர் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக இருந்து ஓய்வு பெறும் திரு. செ. கனகசபை.

பீ. ஏ. பட்டத்துடன் கல்வித்துறையில் டிப்ளோமா பட்டமும் பெற்ற திரு. கனகசபை ஆசிரிய உலகின் ஒளி விளக்காகவும் பொது நலப் பணிகளுக்கோர் கலங்கரை விளக்கமாகவும் அமைபவர்.

பண்டைத் தமிழ் மக்களின் பண்பாட்டை கலை கலாச்சாரங்களை எடுத்து விளக்கும் பல்வேறு துறைகளில் ஒன்றான ஓவியத்துறையில் தன்னை ஈடுபடுத்திய இவர் வித்தியாதரிசி திரு. எஸ். ஆர். கனகசபையிடம் முறையாக ஓவியம் பயின்று முதன் மாணவனுத் திகழ்ந்து இன்று ஒரு முதல் தரமான ஓவியராக விளங்குகிறார்.

முத்தமிழில் ஒன்றாகவிளங்கும் நாடகக்கலைக்கும் புத்துயிர் அளித்து அதனைவளர்த்து வருபவர்களில் முக்கியமானவர் ஆசிரியர் கனகசபை. ஒப்பனைக் கலையில் இவருக்கு நிகர் இவரே.

ஆங்கிலம் புவியியல் முதலியபாடங்களில் கற்றுத் துறைபோன காரணத்தால் அப்பாடங்களை மாணவருக்கும் கற்பிக்கும் திறன் தனித்திறன் என்றே கூற வேண்டும். வட்டு, கிழக்குத் தமிழ்வித்தியாலயம் சித்தன்கேணி கணேசவித்தியாலயம் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் கொக்குவில் இந்துக்கல்லூரி முதலியவை கனகசபையின் தூயபணிகளால் பயன் அடைந்துள்ளன ஆங்கிலம் புவியியல், ஓவியம், முதலிய பல்வேறு பாடங்களில் இவர்கள் சிறப்புப் பெற்றிருப்பதால் இவரைப் 'பல்கலைக் குரிசில்' என்றழைப்பது பொருத்தமானதாகும்.

திரு. கனகசபை சிறந்த ஆசிரியன்மட்டுமல்ல சிறந்த நிர்வாகியும் கூட இவர் வேலணை வயாவிளான் மத்திய மகாவித்தியாலயங்களில் துணை அதிபராக இருந்தகாலத்தில் இவருடைய நிர்வாக ஆற்றலே நாம் அறியக்கூடியதாக இருந்தது மக்கட் பொதுநலப் பணிகளிலும் கலை, கலாச்சார வளர்ச்சிகளிலும் பங்கு கொண்டுழைக்கும் திரு. கனகசபை 38 ஆண்டுகளாக இடையீடின்றிக் கடமை செய்த ஆசிரியப்பணியிலிருந்து கடந்தமாதம் 26-ம் திகதி முதல் ஓய்வு பெற்றுள்ளார் இவர் ஓய்வுபெறுவது ஆசிரிய உலகத்துக்கு நஷ்டமாக இருந்தாலும் கலையுலகிற்குப் பெரும்இலாபம் என்றே கூறலாம்.

செ. ஸ்ரீநிவாசன்
அதிபர், பண்ணாகம்
மெய்கண்டான் மகாவித்தியாலயம்

— —

ஊரதீவு, செவ்வாய்

புங்குடுதீவு - வேலணைக் கடலில் டைனமைற் போட்டு மீன் பிடிக்கப்படுவதாகக் கூறப்படுவதைத் தொடர்ந்து வேலணைப்பாலம் பாதிக்கப்படலாமென இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர்.


வெஸ்லி சினிமா
மானிப்பாய்
இன்று மட்டும்
2-30, 6-30, 10
ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
நடித்த
நான்


இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

தீபாவளிக்கலைவிழா நாளை மாலை யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் விசேடமாக அமைக்கப்பட்டிருக்கும் அரங்கில் நடைபெறும்.

தமிழ் மக்களின் மங்களத்துக்குரியதான புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான் எம். எஸ். சண்முகநாதன் கோஷ்டியினரின் நாதஸ்வர இசையுடன் விழா ஆரம்பமாகும். கலைவிழாவின் நிறைவின்போது நாதஸ்வர இசையீந்த நாதஸ்வர கலாநிதி வித்துவான் திரு. எம். எஸ். சண்முகநாதனை யாழ்ப்பாணம் மாநகரசபை மின்சார பொறியியல் வல்லுனர் திரு இ வைத்திலிங்கம் பொன்னாடைபோர்த்திக் கௌரவிப்பார்.

அடுத்து யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி மாணவிகளின் 'மூன்று காதல்' என்ற நாட்டிய நாடகம், இராமநாதன் கல்லூரிமாணவிகளின் நடன நிகழ்ச்சி, கலாலயா மெல்லிசைக்குழு, இரட்டையர் குழு, கண்ணன் கோஷ்டி ஆகிய சிறந்த மெல்லிசைக் குழுக்களின் இசைவிருந்துகள் உங்கள் செவிக்கும் சிந்தைக்கும் இனிப்பூட்டவுள்ளன.

நாடகப் பிரியர்களுக்கு நறுஞ்சுவையூட்ட புதூர் அற்புதாலயா கலாமன்றத்தினரின் ''கலையும் கண்ணீரும்'' என்ற நாடகமும், இந்திய ஈழநாடுகளில் புகழ்க்கொடி பிடித்த திருநெல்வேலிகலைக்கோவில் நாட்டிய நிறுவன இயக்குனர் கலைஞர் வேல்ஆனந்தன் கோஷ்டியினரின் நாட்டிய நாடகமும் இடம்பெறவுள்ளன.

## வண்டிச்சவாரி போட்டி

யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தையும், தமிழர்களின் தேயப்பண்பையும் பிரதிபலிப்பது வண்டிச்சவாரி என்பதை ஈழநாடு கருத்தில் வைத்துள்ளது. தீபாவளித்தினத்தன்று பிற்பகல் ஒருமணிக்குமாட்டு வண்டிச் சவாரிநடைபெறும்.

## இப்போட்டியில் கலந்துகொள்ள கட்டணம் 5 ரூபா

சவாரிப் போட்டியில் இரட்டைத்திருக்கல் வண்டிகளே கலந்துகொள்ளவுள்ளன. போட்டி 'ஏ', 'பி' என்ற இருபிரிவுகளாகநடைபெறும்

தனித்தனியாக நடைபெறும் 'ஏ' பிரிவு 'பி' பிரிவுப்போட்டியில் 'ஏ' பிரிவில் முதலிடம் பெற்ற வண்டிக்கு 300 ரூபா பெறுமதியான தங்கப்பதக்கமும் 'பி' பிரிவில் முதலிடம் பெறும் வண்டிக்கு 200ரூபா பெறுமதியான தங்கப்பதக்மும் வழங்கப்படும். இதர பரிசுகளுமுள்ளன.

இப்போட்டிக்கு விண்ணப்பிப்போர் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் விண்ணப்பப்பத்திரத்தை நிரப்பி பிரவேசக்கக் கட்டணமான 5 ரூபாவுடன் இணைத்து அனுப்பவேண்டும்

விண்ணப்பம் அனுப்ப வேண்டியமுகவரி:
'சவாரிப் போட்டி' 'ஈழநாடு' யாழ்ப்பாணம்.
அல்லது எம் பூபாலசிங்கம் ஜே. பி 'ஸ்டீலஸன்ஸ்' ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நிறைவுற்றதும் கலைவிழா ஆரம்பமாகும்.

கலைவிழாவில் செவியமுதுண்டவர்களுக்கு வாணவேடிக்கையான கண்ணமுதும் உண்டு (இ.நா)

## திறப்பு விழா

சுன்னாகம் புதன்

காலஞ்சென்ற ஆசிரியமணி ஆறுமுகத்தைக் கௌரவிக்கும்முகமாக இன்றுமாலை 4 மணிக்குக் கந்தரோடை ஆலடிவீதி ஆசிரியமணி ஆறுமுகம் வீதியெனப் பெயர் சூட்டப்பட்டு அப்பெயர்ப் பலகை சுன்னாகம் ப. ச தலைவர் திரு பொ நாகலிங்கத்தால் திறந்துவைக்கப்படும், உடுவில் எம் பி திரு வி தர்மலிங்கம் தலைமையில் இத் திறப்புவிழா நடைபெறும்

0 0 0

தெல்லிப்பளை மகாதனை வாலிபர் சங்கப் புதிய கட்டிடம் இன்று காங்கேசன்துறை எம் பி திரு எஸ் ஜே வி செல்வநாயகத்தினால் திறந்து வைக்கப்படவுள்ளது

## ஊரிக்காடு ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அக்கா பரமேஸ்வரி சிறிது நேரத்தால் அங்கு வந்தார். நான் குளறிக் கொண்டு அக்காவிடம் ஓடி அவரின் உதவியுடன் வெளியில் நின்ற அம்மா, ஐயா, அக்கா வந்த காரில் ஓடிவந்து ஏறிவிட்டேன். அங்கிருந்து யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்ரீண்டன் கந்தோரில் சென்று புகார் செய்துவிட்டு வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்திலும் வந்து முறைப்பாடு செய்தேன்.

மா. குணமணி, பரமேஸ்வரி, வே. பாலசிங்கம், ம. சாரங்கம்மா ஆகியோர் சாட்சியமளித்த பின்மேல் விசாரணை அடுத்த மாதம் 11-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வற்றைக் காவிக்கொண்டு வரச்செய்து அவர்களை பூநகரிக் காரியாதிகாரியிடம் ஒப்படைத்தார்.

ஆடு கம்பு என்பவருக்குச் சொந்தமானதென்று விசாரணையின்போது தெரிவந்தது. இருவரும் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டு தலா 500 ரூபா பிணையிற் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## நேற்று மட்டும் ரூபா 5 லட்சம் வியாபாரம்

கோட்டை, செவ்.

லங்கா சலுசலாவில் வழமையிலும் பார்க்க நேறறு கூடுதலான வியாபாரம் நடைபெற்றது. நேற்று மட்டும் 5 லட்சம் ரூபாவுக்கு வியாபாரம் நடந்துள்ளதாக சலுசலா அதிகாரி ஒருவர் தரிவித்தார்.

இதுவரை இத்தகைய பெரும் தொகைக்கு வியாபாரம் நடைபெறவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் அல்லது ஆங்கில மொழிபெயர்ப்பை உடனுக்குடன் தெளிவாகக் கேட்கமுடிகிறது. தேநீர் இடைவேளைக்காக சபை கலையும்வரை அங்கிருந்து வசதியாக, டாக்டரின் பேச்சைக் கேட்டேன். இடைவேளை முடிந்து சபை மீண்டும் கூடும்போதும் அங்கு வந்து கேட்குமாறு அந்த அதிகாரி அன்புடன் சொன்னார். தமது நாற்காலியையும் எனக்குத் தந்துவிட்டு, அவர் நின்றுகொண்டிருந்ததைப் பார்க்கையில் என்னால் கடவுளின் கருணையை நம்பவே முடியவில்லை.

சபைக் கலரியில் நுழைய அனுமதிச் சீட்டுக் கிடைத்திருப்பினும், அங்கே பொது மக்கள் கலரியில், மொழிபெயர்ப்பைக் கேட்பதற்கான வசதியில்லை. புரியாத மொழியில் பேசும் பேச்சைக் கேட்டு என்ன பயன்? அதற்காகத்தான் எனக்கு 'டிக்கெட்' கிடைக்காமற் செய்து, இந்த விசேஷ வசதியை இறைவன் கொடுத்தான்போலும்! எல்லாம் அவன் செயல். தவறு ஏதும் இருக்கமுடியுமா?

(தொடரும்)



கலைஞர் வேல்ஆனந்தனின் 'பஸ்மாசுரமோகினி' நாட்டிய நாடகம் இன்று மாலை யாழ். வீரசிங்க மண்டபத்தில் ஆனைப்பந்தி உயர் கலைக்கல்லூரி ஆதரவில் நடைபெறும் நாட்டிய விழாவில் முக்கிய நிகழ்ச்சியாக இடம் பெறுகிறது. நாளை யாழ் முற்றவெளி மைதானத்தில் நடைபெறும் 'ஈழநாடு' தீபாவளி கலை விழாவிலும் இவர்களது நிகழ்ச்சி இடம்பெறுகிறது.


யும் உள்ளே போகலாம் என்ற ஏதோ குருட்டு நம்பிக்கை. ஒரு எம். பிக்குத் துண்டு எழுதி அனுப்பினால் அவர் தம் பொறுப்பில் 'டிக்கெட்' அனுப்பச்செய்யலாமென்று அங்கிருந்த ஒரன்பர் கூறவே, அச்சிட்ட துண்டில், என் பெயர், எம் பி யின் பெயர், வந்த காரணம் இவற்றை எழுதி அனுப்பினேன்.

இந்தத் துண்டை வாங்கி, பதிவுசெய்து எம். பி. யிடம் அனுப்ப இரு அதிகாரிகள் உள்ளனர். அவர்களின் மேசையைப் பெரும் கூட்டம் முற்றுகையிட்டுக் கொண்டிருந்தது. கூட்டத்தை இடித்துத் தள்ளிக் கொண்டு ஒருவிதமாக அதிகாரியொருவரிடம் துண்டைத் தந்தேன். அத்துண்டில் நம்பரும் இருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம், அவர் ஏதோ சிங்களத்தில் சொன்னார். பலர் துண்டுகளை வாங்கிக்கொண்டனர். சிங்களம் தெரியாத காரணத்தால், அந்த அதிகாரி அறிவிப்பது என்னவென்று தெரியவில்லை. ஒருவேளை என் துண்டுக்கும் பதில் வந்துவிட்டதோ என்று பக்கத்திலிருந்த ஒரு போலீஸ் அன்பரிடம் விசாரிக்கச் சொன்னேன். அவர் தயவு காட்டி, நேரில் போய்க் கேட்டு, என் நம்பர் வரவில்லை என்றார். நமது நம்பர் அடங்கிய சிறிய துண்டை நம்மிடம் முதலிலேயே கிழித்துத் தருகிறார்கள். என் நம்பர் 000812. அதை அந்தப் போலீஸ் ஜட்' நாளில் பெரும் கூட்டத்தை முன்னிட்டு, ஒரு எம் பி.க்கு ஒரு டிக்கெட்தான் அனுமதித்தனராம். ஆகவே எனக்குக் கிடைக்காததில் வியப்பில்லை

இவ்வித ''நெருக்கடி''யான சமயங்களில் நம் மனம் கடவுளைத்தானே நினைக்கும்! உள்ளிருக்கும் அவர், வேறு வாசலுக்குச் சென்று முயலும்படி எண்ணம் அளித்தார். அதன்படி பிரமுகர்கள் நுழையும் வாசலுக்குச்சென்றேன். ''தற்செயலாக'' (கடவுள்செயலாக) உள்ளிருந்து ஒரு தமிழ் செனேட்டர் வந்து, என் நிலையை அறிந்து, போலீஸுக்குச் சொல்லிவிட்டு என்னையும் மேல் தளத்துக்கு அழைத்துச் சென்றார். அவர் வாழ்க! ஆனால் பார்லிமெண்ட் கலரிக்குச் செல்லும் 'டிக்கெட்' இல்லாமல் அன்று யாரையும் உள்ளே விடவில்லை. இரட்டிப்புக் காவல். கலரியில் இடமுமில்லையாம். ஒரு நாற்காலியில் என்னை அமர்த்திவிட்டு, அந்த செனேட் அன்பரும் சென்றுவிட்டார்.

இவ்வளவுதூரம் கொண்டு வந்துவிட்ட அந்தக் கடவுள் இனியும் கைவிடமாட்டார் என்று நம்பிக்கை. அந்த ஆசனத்தில் சில நிமிடங்கள் இருந்தேன். பக்கத்திலே ஓர் அறையிலிருந்து, நிதி அமைச்சர் டாக்டர் பெரேரா, சிங்களத்தில் பேசும் ஒலி கேட்டது. ஒலிபெருக்கி அதிகாரியின் விசேஷ அறையாம் அது

(6-ம் கலம் பார்க்க)



Eau de Cologne
COLIBRI
நோயாளிகளைப்
பார்க்கப் போகும்பொழுது
கொலிபிரிஒடிகொலோன்
எடுத்துச் செல்லுங்கள்
நான்கு அளவுகளில் கிடைக்கும்


அவ்ரா அன் கோ
19, செட்டியார் தெரு,
கொழும்பு - 11. போன்: 27211
KMJ